கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை ஜுலை 2010 ரூபாய் 15/-



## மனதை நண்பனாக்கும் யோகப் பயிற்சி



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 4 ஜூலை 2010

**3** ஸ்தாபக ஆச்சாரியரின் உரை

## மனதை நண்பனாக்கும் யோகப் பயிற்சி

மனமே நண்பன்; மனமே எதிரி. மனதை நண்பனாகவே வைத்துக் கொள்வது குறித்த பயன்மிகு கருத்துகள்

**10** தத்துவ உரை

## பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால்

பிறந்தோம், வளர்ந்தோம், தொய்ந்தோம், மடிந்தோம்—வாழ்க்கை இவ்வளவு தானா? பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால் இருப்பது என்ன?

**20** சிறப்புக் கட்டுரை

## தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும்

செம்மொழியான தமிழ் மொழிக்கும் பெருமைமிக்க தமிழ்ப் பண்பாட்டிற்கும் இடையிலான போராட்டம் குறித்த ஓர் ஆய்வு

**24** பிரபுபாதருடன் ஓர் உரையாடல்

## உணவு, உறக்கம், பாலுறவு மற்றும் தற்காப்பிற்கான கல்வி திருப்தியளிக்காது

நவீன காலக் கல்வி பயனற்றது என்பதை பகிரங்கப்படுத்தும் ஸ்ரீல பிரபுபாதரின் உரையாடல்

**15** பகவத் கீதையை வைத்து உறுதிமொழி எடுத்த பிரதமர்

**15** வேலூரில் கிருஷ்ணருக்காக ஓர் இடம்

**16** பிராமணரும் செருப்புத் தைப்பவரும்

**19** ஸ்ரவண கீர்த்தன முகாம்

**29** ஸ்ரீமத் பாகவதம்

**31** கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

**32** தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்கள்





## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.


**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அலுவலக உதவி:** சுபாத்ம கௌரங்க தாஸ், சதீஷ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073. தொலைபேசி: (044) 22272920

**செயல் அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.



**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.


பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

# சந்தா அறிமுகம்

## மக்களிடையே பெரும் வரவேற்பு

இதுவரை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வந்து கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், இனி மாதந்தோறும் வரவிருக்கின்றது என்பதும், சந்தாதாரர்களை சேர்க்கத் தொடங்கிவிட்டோம் என்பதும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் அன்பர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. அறிமுகப்படுத்தப்பட்ட ஒரே மாதத்தில் ஆயிரக்கணக்கான அன்பர்கள் சந்தாதாரர்களாக இணைந்துள்ளது மகிழ்ச்சியை அளிக்கின்றது. முறையான ஆன்மீக விஷயங்களை அதிகாரப்பூர்வமான முறையில் வழங்கக்கூடிய இதழ்கள் இல்லையே என்று ஏங்கிய பக்தர்களின் தாகத்தினை ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் நிச்சயம் பூர்த்தி செய்யும். எமக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ள அனைத்து பக்தர்களுக்கும் நன்றி தெரிவித்து, விரைவில் தமிழகம் அறிந்த பத்திரிகையாக வலம் வர வேண்டும் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய்வோமாக.



நீங்களும் சந்தாதாரராக மாற, தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், தங்களது முகவரியை எமது சந்தா அலுவலகத்திற்கு (கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு), சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில் அனுப்பி வைக்கவும். at par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.

### சந்தா தொகை

| | |
|---|---|
| ஒரு வருடம்: | ரூ. 160 |
| இரண்டு வருடம்: | ரூ. 300 |
| ஐந்து வருடம்: | ரூ. 700 |

### அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்,
7C, வாசன் தெரு,
பெரம்பூர், சென்னை - 600011.
தொலைபேசி: (044) 25514553,
98948 14553

### கேள்விகளும் கருத்துகளும்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கருத்துகளை எங்களுக்குத் தெரிவிக்கவும், சந்தா குறித்து தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் தெளிவுபெறவும் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியை தொடர்பு கொள்ளவும்.

### எமது குறிக்கோள்


- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# மனதை நண்பனாக்கும் யோகப் பயிற்சி

**வழங்கியவர்:** தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

*பந்துர் ஆத்மாத்மனஸ் தஸ்ய*
*யேனாத்மைவாத்மனா ஜித:*
*அனாத்மனஸ் து ஷத்ருத்வே*
*வர்தேதாத்மைவ ஷத்ருவத்*

“மனதை வென்றவனுக்கு மனமே சிறந்த நண்பனாகும்; ஆனால் அவ்வாறு செய்யத் தவறுபவனுக்கோ, அதுவே மிகப்பெரிய விரோதியாகும்.” (பகவத் கீதை 6.6)



யோகப் பயிற்சியின் நோக்கம், நம் மனதை நமக்கு நண்பனாக்கிக் கொள்வதாகும். ஜட விஷயங்களிடம் தொடர்பு கொண்டுள்ள நமது மனம், குடி போதையிலுள்ள ஒருவனின் மனதைப் போன்று, நமது எதிரியாகும். சைதன்ய சரிதாம்ருதத்தில் (மத்ய லீலை 20.117), “கிருஷ்ணரை மறந்த உயிர்வாழி, தனது நினைவிற்கெட்டாத காலம் முதல் இறைவனின் புறச்சக்தியினால் கவரப்பட்டுள்ளான். அத்தகு ஜட வாழ்வில், மாயா சக்தியினால் அவன் பலவித துன்பங்களுக்கு ஆளாகின்றான்,” என்று கூறப்பட்டுள்ளது.

நான் ஓர் ஆன்மீக ஆத்மா, பகவானின் அம்சம்; ஆனால் எனது மனம் களங்கமடைந்தவுடன், எனக்குள்ள சிறு சுதந்திரத்தின் காரணமாக, பகவானை எதிர்க்கும் நிலைக்கு வருகிறேன். அப்போது, “நான் எதற்காக கிருஷ்ணருக்கு, கடவுளுக்கு தொண்டு செய்ய வேண்டும்? நானே கடவுள்” போன்ற எண்ணங்கள் நமது மனதில் எழுச்சி பெற்று, நம்முடைய சூழ்நிலை

முற்றிலுமாக மாறிவிடுகிறது. உடனடியாக நாம் மாயைக்கு உட்படுகின்றேன், நமது முழு வாழ்க்கையும் பயனற்றதாகி விடுகிறது. நாம் மாபெரும் சாம்ராஜ்ஜியங்களை வெற்றி கொள்ள நினைக்கிறோம், ஆனால் நமது மனதினை வெற்றி கொள்ள முடியாவிட்டால், பெரிய சாம்ராஜ்ஜியத்தையே வெற்றி கொண்டாலும், அது தோல்வியே. நம் சொந்த மனமே நமக்கு மிகப்பெரிய எதிரியாகிவிடும்.

## யோகப் பயிற்சியின் நோக்கம்

மனித வாழ்வின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக, மனதை நண்பனாக்கிக் கொள்வதே அஷ்டாங்க யோகப் பயிற்சியின் நோக்கமாகும். மனம் கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில், யோகப் பயிற்சி, வெறும் கால விரயமே—பகட்டுக்காகச் செய்யப்படும் வெளிவேஷமே. தன் மனதினைக் கட்டுப்படுத்த முடியாதவன் மிகப்பெரிய எதிரியுடன் வாழ்கிறான், அவனுடைய வாழ்க்கையும் வாழ்க்கையின் நோக்கமும் அர்த்தமற்றதாகி விடுகிறது.

தன்னைவிட உயர்ந்த அதிகாரியின் கட்டளையை நிறைவேற்ற முயற்சிப்பது உயிர்வாழியின் இயல்பான தன்மை யாகும். வெற்றி கொள்ளப்படாத விரோதி யாக ஒருவனுடைய மனம் இருக்கும் வரை, அவன் காமம், கோபம், பேராசை, மாயை போன்றவற்றின் கட்டளைகளை ஏற்றே ஆக வேண்டும். ஆனால் மனதை வெற்றி கொண்டவுடன், இதயத்தில் பரமாத்மாவாக வீற்றிருக்கும் பகவானின் கட்டளைகளை அவன் இயற்கையாகவே நிறைவேற்ற முயற்சி செய்வான். உண்மையான யோகப் பயிற்சியானது, இதயத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவை சந்திப்பதில் முற்றுப் பெறுகிறது. பகவானின் கட்டளைகளுக்கு முழு சரணாகதி அடைவது என்பது, கிருஷ்ண உணர்வை நேரடியாக ஏற்றுக்கொள்பவனால் இயல்பாக அடையப்படுகின்றது.

ஜிதாத்மன: ப்ரஷாந்தஸ்ய
பரமாத்மா ஸமாஹித:
ஷீதோஷ்ண ஸுக-து:கேஷு
ததா மானாபமானயோ:

“மனதை வென்றவன், அமைதியை அடைந்துவிட்டதால், பரமாத்மா அவனுக்கு ஏற்கனவே அடையப்பட்டு விடுகின்றார். அத்தகு மனிதனுக்கு இன்பதுன்பம், குளிர்வெப்பம், மான அவமானம் எல்லாம் சமமே.” (பகவத் கீதை 6.7).

உண்மையில், இதயத்தில் பரமாத் மாவாக வீற்றிருக்கும் முழுமுதற் கடவுளின் கட்டளைகளை நிறைவேற்றுவது ஒவ்வோர் உயிர்வாழிக்கும் அவசியம். மனமானது வெளிப்புற சக்தியால் தவறாக வழிநடத்தப்படும்போது, ஒருவன் ஜடச் செயல்களில் பந்தப்படுகின்றான். எனவே, ஏதாவது ஒரு யோக முறையின் மூலம் அவனது மனம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், உயர் கட்டளைகளுக்கு செவி சாய்த்தல் அவசியம். அவனுடைய மனம் உயர்ந்த இயற்கையில் நிலைபெறும்போது, முழுமுதற் கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இல்லை. மனதைக் கட்டுப்படுத்துவதன் விளைவு என்னவெனில், பரமாத்மாவின் கட்டளைகளை ஒருவன் பின்பற்றத் தொடங்குகிறான். கிருஷ்ண உணர்வில் இருப்பவன் இத்தகு தெய்வீக நிலையினை உடனடியாக அடைந்துவிடுவதால், இன்ப துன்பம், குளிர்வெப்பம் போன்ற பௌதிக வாழ்வின் இருமைகளால் அவன் பாதிக்கப்படுவதில்லை. இந்த நிலையே ஸமாதி, அல்லது பரமனில் மூழ்கியிருத்தல் என்று அழைக்கப்படுகிறது.

க்ஞான-விக்ஞான-த்ருப்தாத்மா
கூட-ஸ்தோ விஜிதேந்த்ரிய:
யுக்த இத்-யுச்யதே யோகீ
ஸம-லோஷ்ட்ராஷ்ம-காஞ்சன:

“ஞானத்தினாலும் விஞ்ஞானத் தினாலும் (அனுபவ ஞானத்தினாலும்) ஒருவன் முழு திருப்தியடையும்போது, அவன் தன்னுணர்வில் நிலைபெற்ற வன் என்றும், யோகி என்றும் அழைக்கப் படுகிறான். அத்தகையோன் உன்னதத்தில் நிலைபெற்று தன்னடக்கத்துடன் உள் ளான். கூழாங்கற்களோ, கற்களோ, தங்கமோ, அவன் அனைத்தையும் சம மாகக் காண்கிறான். (பகவத் கீதை 6.8)

## கடவுளைப் புரிந்து கொள்ளுதல்

பரம்பொருளை உணராத ஏட்டுக் கல்வி பயனற்றது. பக்தி ரஸாம்ருத சிந்துவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

அத: ஸ்ரீ-க்ருஷ்ண-நாமாதி
ந பவேத் க்ராஹ்யம் இந்த்ரியை:
ஸேவோன்முகே ஹி ஜிஹ்வாதௌ
ஸ்வயம் ஏவ ஸ்பூரத்-யத:

“ஜடத்தினால் களங்கமடைந்துள்ள புலன்களைக் கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீகமான நாமம், ரூபம், குணம் மற்றும் லீலைகளை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. பகவானின் உன்னத அன்புத் தொண்டில் ஈடுபட்டு ஆன்மீகத்தில் திளைத்திருக்கும்போது மட்டுமே, பகவானின் கருணையினால் அவை அவனுக்கு வெளிப்படுத்தப்படும்.”

இப்போது நாம் ஸ்ரீ கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், ஏன் அவரை நாம் முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்கிறோம் என்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் வேத இலக்கியங்களில் கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, பிரம்ம சம்ஹிதையில், ஈஷ்வர: பரம: க்ருஷ்ண: ஸச்-சித்-ஆனந்த விக்ரஹ:, “நித்தியமான ஆனந்தமயமான ஆன்மீக உடலையுடைய கிருஷ்ணரே எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் முழுமுதற் கடவுளாவார்.” ரஜோ குணத்திலும் தமோ குணத்திலும் இருப்பவர்கள் பகவானின் உருவத்தை பற்றி கற்பனை செய்கின்றனர். அதில்

**மனம் கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில், யோகப் பயிற்சி, வெறும் கால விரயமே— பகட்டுக்காகச் செய்யப்படும் வெளிவேஷமே. தன் மனதினைக் கட்டுப்படுத்த முடியாதவன் மிகப்பெரிய எதிரியுடன் வாழ்கிறான், அவனுடைய வாழ்க்கையும் வாழ்க்கையின் நோக்கமும் அர்த்தமற்றதாகி விடுகிறது.**

அவர்கள் குழப்பமடையும்போது, "பகவானுக்கு உண்மையில் உருவம் இல்லை. பரம்பொருள் அருவமானது, அவ்யக்தமானது," என்று கூறுகின்றனர். இஃது அவர்களின் விரக்தியடைந்த நிலையைக் காட்டுகின்றது.

உண்மையில் கடவுளுக்கு உருவம் உண்டு. ஏன் கிடையாது? வேதாந்த சூத்திரத்தில், ஜன்மாத்-*யஸ்ய யத:*, "எவரிடமிருந்து எல்லாம் தோன்றுகின்றதோ அவரே பரம்பொருள்," என்று கூறுகின்றது. தற்போது நம்மிடம் உருவம் உள்ளது. நாம் மட்டும் அல்ல, பற்பல உயிர்வாழிகளுக்கும் உருவம் உள்ளது. அந்த உருவங்கள் எல்லாம் எங்கிருந்து வந்தன? இந்த உருவங்களின் தோற்றுவாய் எது? இவை மிகவும் யதார்த்தமான கேள்விகள். கடவுளுக்கு உருவம் கிடையாது என்றால், அவரது பிள்ளைகளுக்கு உருவம் எவ்வாறு இருக்க முடியும்? எனது தந்தைக்கு உருவம் கிடையாது என்றால், எனக்கு உருவம் இருப்பது எப்படி சாத்தியம்? என்னுடைய தந்தைக்கு உருவம் இல்லையெனில், என் உருவம் எங்கிருந்து வந்திருக்க முடியும்? இந்த உடலில் உருவத்துடன் வாழும்போது



தொந்தரவுக்கு உட்படும் மக்கள், விரக்தியடையும்போது, உருவத்திற்கு எதிரான கருத்தை வளர்த்துக் கொண்டு, கடவுள் உருவமற்றவர் என்று கற்பனை செய்கின்றனர். ஆனால் பிரம்ம சம்ஹிதை அவர்களுக்கு மறுப்பு தெரிவிக்கின்றது. கடவுளுக்கு உருவம் உண்டு; மேலும், அவரது உருவம், நித்தியமானது, முழு அறிவுடையது, ஆனந்தமயமானது. (ஈஸ்வர: பரம: க்ருஷ்ண: ஸச்-சித்-ஆனந்த-விக்ரஹ:) ஸத் என்றால் நித்யமானது என்றும், சித் என்றால் அறிவு நிறைந்தது என்றும், ஆனந்த என்றால் இன்பமயமானது என்றும் பொருள். எனவே, கடவுளுக்கு உருவம் உண்டு. ஆனால் அவரது உருவம், முற்றிலும் ஆனந்தமயமானது, அறிவு நிறைந்தது, மற்றும் நித்தியமானதுமாகும்.

நாம் தற்பொழுது நமது உடலையும் பகவானின் உடலையும் ஒப்பிட்டு பார்க்கலாம். நமது உடல் நித்யமானதும் அல்ல, ஆனந்தமயமானதும் அல்ல, முழு அறிவு நிரம்பியதும் அல்ல. எனவே, நமது உடல் கடவுளின் உருவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பது தெளிவு. ஆனால் ஓர் உருவத்தைப் பற்றி நாம் நினைக்கையில், அந்த உருவம் நமது உருவத்தை ஒத்ததாகவே இருக்க முடியும் என்று நாம் எண்ணுகிறோம். எனவே, கடவுள் நம்மிலிருந்து வேறுபட்டவராக இருக்கக் கூடும் என்று எண்ணுவதால், கடவுளுக்கு உருவம் இருக்க முடியாது என்ற முடிவுக்கு வருகிறோம். இது வெறும் மனக் கற்பனை, அறிவுப்பூர்வமானது அல்ல. ஜடப் புலன்களின் மூலம் கடவுளின் நாமம், ரூபம், குணம், மற்றும் லீலைகளை யாராலும் புரிந்து கொள்ள இயலாது. நம்முடைய புலன்கள் குறைபாடுள்ளவை. குறைபாடுகளுக்கு அப்பாற்பட்ட உன்னதமான நபரை நம்மால் எவ்வாறு கற்பனை செய்ய முடியும்? அஃது இயலாது.

## கடவுளைப் பார்த்தல்

அப்படியெனில், அவரை எவ்வாறு பார்க்க முடியும்? ஸேவோன் முகே ஹி ஜிஹ்வாதௌ. நாம் நம் புலன்களை தூய்மைப்படுத்தினால், அந்த தூய்மை யடைந்த புலன்களைக் கொண்டு நம்மால் கடவுளை தரிசிக்க இயலும். நமது தற்போதைய நிலை, கண்களில் புறை இருப்பதைப் போன்றது. நமது கண்கள் புரை நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதால், நம்மால் பார்க்க முடியவில்லை. பார்க்க முடியவில்லை என்பதால் பார்ப்பதற்கு எதுவுமே இல்லை என்று முடிவு செய்துவிடக் கூடாது. நமது கண்களிலுள்ள புறை அகற்றப்பட்டால், நம்மால் கடவுளைக் காண இயலும். பிரம்ம சம்ஹிதையில், *ப்ரேமாஞ்ஜன-ச்சுரித-பக்தி-விலோசனேன ஸந்த: ஸதைவ ஹ்ருதயேஷு விலோகயந்தி,* "யாருடைய கண்கள் தெய்வீக அன்பு என்னும் மையினால் அலங்கரிக்கப் பட்டுள்ளதோ, அத்தகு பக்தர்கள் இறைவனைத் தங்களது இதயத்தில் வைத்து இருபத்தி நான்கு மணி நேரமும் காண்கின்றனர்" என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, நாம் நமது புலன்களை தூய்மைப்படுத்துவது அவசியமாகின்றது. இதன் பிறகு, கடவுளின் உருவம் எப்படிப்பட்டது? கடவுளின் திருநாமம் என்ன? அவரது குணங்கள் யாவை? அவரின் பரிவாரங்கள் யாவை? என்பனவற்றை நம்மால் புரிந்துகொள்ள முடியும். மேலும், நம்மால் கடவுளை எல்லாவற்றிலும் காண முடியும்.

வேத இலக்கியங்களில் கடவுளின் உருவத்தைப் பற்றிய பல்வேறு குறிப்புகள் உள்ளன. உதாரணமாக, கடவுளுக்கு கைகளோ கால்களோ இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நாம் கொடுக்கும் அனைத்து பொருள்களையும் அவரால் ஏற்றுக் கொள்ள முடியும். மேலும், கடவுளுக்கு கண்களோ காதுகளோ இல்லை என்றும், ஆனாலும் அவரால் எல்லாவற்றையும் பார்க்க முடியும், கேட்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விஷயங்களை மேலோட்டமாகப் பார்த்தால் முரண்பாடுகள் இருப்பது போல் தோன்றலாம். ஒருவர் பார்க்கிறார் என்றால் அவருக்கு கண்கள் இருக்க வேண்டும் என்று நாம் நினைப்பதே இதற்குக் காரணம். உண்மையில் கடவுளுக்கு கண்கள் உள்ளன. ஆனால் அவரது கண்கள் நமது கண்களிலிருந்து வேறுபட்டவை. இருளிலும் அவரால் காணமுடியும், நம்மால் முடியாது. பல கோடி மைல்களுக்கு அப்பாற்பட்ட தமது சாம்ராஜ்ஜியத்தில் நித்தியமாக



வீற்றிருந்தாலும் நமது இரகசிய ஆலோசனைகளைக்கூட அவரால் கேட்க முடியும்.

எனவே, கடவுள், நம்மைப் பார்ப் பதையோ, நம் உரையாடலைக் கேட் பதையோ, நம்மைத் தொடுவதையோ, நம்மால் தவிர்க்க இயலாது. பகவத் கீதையில் (9.26) ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

*பத்ரம் புஷ்பம் ஃபலம் தோயம்*
*யோ மே பக்த்யா ப்ரயச்சதி*
*தத் அஹம் பக்த் யுபஹ்ருதம்*
*அஷ்நாமி ப்ரயதாத்மன:*

"யாரேனும் எனக்கு அன்புடனும் பக்தியுடனும் பூவோ பழமோ காய்கறி களோ நீரோ அளித்தால், நான் அவற்றை ஏற்றுக் கொண்டு உண்கிறேன்."

அவர் எவ்வாறு உண்கிறார்? அவர் உண்பதை நம்மால் காண முடியாது. ஆனால் அவர் உண்கிறார், இதனை நம்மால் தினமும் உணர முடியும். தினமும் கடவுளுக்கு உணவை நைவேத்யம் செய்த பின்னர், உணவின் சுவையில் மாற்றத்தை நம்மால் உணர முடிகிறது. எனவே, கடவுள் உண்கிறார் என்பது உறுதி. அவர் சுய திருப்தி உடையவர் என்பதால், அவர் நம்மைப் போன்று உண்பதில்லை. யாரேனும் நமக்கு ஒரு தட்டு நிறைய உணவு வகைகளை அளித்தால் நாம் அவற்றை சற்று நேரத்தில் சாப்பிட்டு விடுவோம். ஆனால் கடவுள் உணவுகளை உட்கொள்ளும்போது, அவர் அவற்றை அப்படியே திருப்பிக் கொடுத்துவிடுகிறார். அவர் சுய திருப்தியுடையவர் என்பதால், அவருக்கு பசி கிடையாது. கடவுள் பூரணமானவர் என்பதால், நாம் அளிக்கும் உணவுகளை அவர் உண்டாலும், அந்த உணவுப் பொருள்கள் அப்படியே இருக்கின்றன. அவரால் தமது கண்களால்கூட உண்ண முடியும். *அங்கானி யஸ்ய ஸகலேந்த்ரிய-வ்ருத்திமந்தி*, "கடவுளின் உடலிலுள்ள எந்தவொரு உறுப்பும் மற்ற உறுப்புகளின் வேலையைச் செய்யும் திறன் வாய்ந்தவை" என்று பிரம்ம சம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

நம்மால் நமது கண்களைக் கொண்டு பார்க்கத்தான் முடியும், சாப்பிட முடியாது. ஆனால் கடவுள் தன் கண்களால் பார்த்த மாத்திரத்திலேயே உணவைச் சாப்பிடவும் முடியும்.

நமது தற்போதைய நிலையில் இவற்றை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. கடவுளின் திவ்யமான தொண்டில் ஈடுபடுவதன் மூலம், அவரது தெய்வீகத் திருநாமம், உருவம், தன்மைகள், மற்றும் அவரது லீலைகளைப் பற்றிய விஷயங்கள் ஒருவனுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. நம்முடைய சுய முயற்சியால் கடவுளைப் புரிந்துகொள்ள இயலாது. கடவுள் தன்னை வெளிப்படுத்தினால், அப்போது நம்மால் அவரைப் புரிந்துகொள்ள முடியும். நம் சுய முயற்சியால் கடவுளைக் காண பிரயத்தனம் செய்வது, இருட்டில் சூரியனைத் தேடுவது போன்றதாகும். பிரகாசமான மின் விளக்கை வைத்து சூரியனைக் கண்டுபிடிக்க முடியும் என்று நாம் நினைக்கலாம். ஆனால் அது சாத்தியமல்ல. சூரியன் தானாகவே விருப்பப்பட்டு வானத்தில் உதித்தால் மட்டுமே நம்மால் சூரியனைப் பார்க்க முடியும். அதுபோலவே நம்முடைய சுய முயற்சியால் கடவுளைக் காண முடியாது. ஏனெனில், நம்முடைய புலன்கள் குறைபாடுள்ளவை, அவற்றை நாம் தூய்மை செய்தாக வேண்டும். கடவுள் நம்மிடம் திருப்தியடைந்து, அவரே முன்வந்து தன்னை வெளிப்படுத்தும் காலம் வரை பொறுத்திருக்க வேண்டும். இதுவே கிருஷ்ண உணர்வு முறையாகும். "ஓ! எனதருமைக் கடவுளே! எனதருமை கிருஷ்ணரே! நீங்கள் என் முன்வர வேண்டும். நான் உங்களைக் காண வேண்டும்" என்று நாம் கடவுளிடம் கட்டளையிட முடியாது. கடவுள் என்பவர் நமது கட்டளைகளை ஏற்கும் வேலைக்காரன் அல்ல.

## கிருஷ்ணரின் கருணையைப் பெறுதல்

எனவே, கடவுளைத் திருப்தி செய்ய முயற்சி செய்யும் யோகமுறை, உண்மையான யோக முறையாகும். இதை விட்டுவிட்டு, பற்பல முட்டாள் களைக் கடவுள் என்று மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மக்களால் கடவுளைக் காண முடிவதில்லை என்பதால், யாரேனும் ஒருவர் தன்னை "கடவுள்" என்று கூறினால் அவரை ஏற்றுக் கொள்கின்றனர். கடவுள் யார் என்று யாருக்கும் தெரியாது. 'நான் பரம்பொருளைத் தேடுகிறேன், இறைவனைத் தேடுகிறேன்' என்று ஒருவர் கூறலாம். ஆனால் பரம்பொருளைப் பற்றிய அறிவு அவருக்கு இல்லாததால்,



அவர் எப்படி பரம்பொருளைத் தேட முடியும்? நான் தங்கம் வாங்க விரும்பினால், முதலில் தங்கம் என்றால் என்ன என்பதை நான் அறிந்திருக்க வேண்டும், அல்லது சிறிது அனுபவமாவது இருக்க வேண்டும். இல்லையேல் மக்கள் என்னை ஏமாற்றிவிடுவர். அதுபோலவே, கடவுள் என்றால் என்ன என்பதை அறியாத பல்வேறு மக்கள், பல அயோக்கியர்களையும் பாதகர்களையும் கடவுள் என்று ஒப்புக் கொண்டு ஏமாறுகின்றனர்.

யாராவது ஒருவன் தன்னைக் கடவுள் என்று கூறுவான், மற்றொரு அயோக்கியன் அவனைக் கடவுள் என்று ஒப்புக் கொள்வான். தன்னைக் கடவுள் என்று சொல்பவன் ஓர் அயோக்கியன், அவனைக் கடவுள் என்று ஏற்றுக் கொள்பவனும் அயோக்கியனே. கடவுளைக் காண்பதற்கும் அவரைப் புரிந்துகொள்வதற்கும் உரிய தகுதியை ஒருவன் அடைய வேண்டும். இதுதான் கிருஷ்ண உணர்வு. நாம் நம்மை கடவுளின் சேவையில் ஈடுபடுத்தினோம் என்றால், கடவுளைக் காண்பதற்கு தகுதியுடையவர்களாக ஆவோம், இல்லையேல் அது முடியாது.

உலகாயதக் கல்வியில் பட்டம் பெற்றிருப்பதால் மட்டும் ஒருவன் கிருஷ்ண உணர்வினன் ஆக முடியாது. B.A., M.A., Ph.D. போன்ற பட்டங்களால் பகவத் கீதையை ஒருவர் புரிந்து கொள்வார் என்று சொல்ல முடியாது. இந்த உன்னத விஞ்ஞானத்தைப் புரிந்துகொள்ள வேறு விதமான புலன்கள் தேவைப்படுகின்றன. இறைவனுக்கு அன்புடன் பக்தித் தொண்டு செய்வதன் மூலம், ஒருவன் தனது புலன்களை தூய்மைப்படுத்த முடியும். இல்லையேல் ஒருவர் பெரிய படிப்பாளியாக, டாக்டராக, Ph.D. பட்டம் பெற்றவராக இருந்தாலும் கிருஷ்ணரைப் பற்றிய அறிவில் அவர் தவறு செய்யக் கூடும். தூய கிருஷ்ண பக்தர்களின் சங்கத்தின் மூலமாக அவரைத் தெரிந்து கொள்ள முடியும். தூய கிருஷ்ண உணர்வில் இருப்பவர், கிருஷ்ணரின் கருணையால் தெளிந்த ஞானத்தை அடைகிறார். பிறகு, அவர் கிருஷ்ணரைக் காண முடியும், கிருஷ்ணரிடம் பேச முடியும், என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.

கடவுளின் உன்னத அன்புத் தொண்டில் பணிவான முறையில் ஒருவன் ஈடுபட்டால், அவன் கல்வியறிவு அற்றவனாக, அ, ஆ, இ, ஈ, தெரியாத வனாக இருந்தாலும், அவனால் கடவுளை உணர முடியும். மறுபுறம் ஒருவன் நிறைய படித்தவனாக இருப்பினும், அவனால் கடவுளை உணர முடியாமல் போகலாம். அவ்வாறு கடவுளை உணர்ந்து, அன்புடன் அவருக்கு பக்தித் தொண்டு செய்வதற்கு எந்த மதம் உதவி புரிகின்றதோ, அதுவே முதல் தர மதம் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது.

## முதல் தரமான மதம்

இந்து மதம்தான் முதல் தரமான மதம் என்றோ, கிறிஸ்தவ மதம் முதல் தரமான மதம் என்றோ, எந்தவொரு மதத்தையும் ஸ்ரீமத் பாகவதம் குறிப்பிடவில்லை. எந்தவொரு மதம், பக்தித் தொண்டு செய்வதிலும் கடவுளிடம் அன்பு செலுத்துவதிலும் ஒருவனுக்குத் துணை புரிகிறதோ, அந்த மதம்தான் முதல் தரமான மதம் என்றுதான் ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. கடவுளைப் புரிந்துகொள்வதும், கடவுளிடம் அன்பு செலுத்துவது எப்படி என்பதை புரிந்துகொள்வதுமே ஒரு மதத்தின் நோக்கமாகும். கடவுளிடம் அன்பு செலுத்துவது எப்படி என்பதை போதிக்கும் மதம், முதல் தரமானது, இல்லையேல் அது பயனற்றது. ஒருவர் சிரத்தையான முறையில் தன் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவராக இருக்கலாம். ஆனால் கடவுளின் மீது அன்பின்றி, பௌதிகத்தில்

**கடவுளைப் புரிந்துகொள்வதும், கடவுளிடம் எப்படி அன்பு செலுத்துவது என்பதை புரிந்துகொள்வதுமே ஒரு மதத்தின் நோக்கமாகும். கடவுளிடம் அன்பு செலுத்துவது எப்படி என்பதை போதிக்கும் மதம், முதல் தரமானது, இல்லையேல் அது பயனற்றது.**

நாட்டமுடையவராக அவர் இருந்தால், அவர் பின்பற்றும் மதம் மதமே அல்ல.

உண்மையான மதம் என்பது எந்த விதமான சுயநல நோக்கமும் இடையூறுகளும் அற்றதாகும். *ஸ வை பும்ஸாம் பரோ தர்மோ யதோ பக்திர் அதோக்ஷஜே.* *அதோக்ஷஜ* என்பது கடவுளின் திருநாமங்களில் ஒன்றாகும். *அதோக்ஷஜ* என்றால், தம்மைக் காண மேற்கொள்ளப்படும் எல்லா ஜட முயற்சிகளையும் தோற்கடிப்பவர் என்று பொருள். *அக்ஷஜ* என்பது நேரடி ஞானம் அல்லது பரிசோதனை மூலமாகப் பெறப்படும் அறிவைக் குறிக்கும். *அத:* என்றால் எட்ட முடியாத என்று பொருள். எனவே, கடவுளை ஆராய்ச்சிகளின் மூலம் தெரிந்துகொள்ள முடியாது. தெய்வீக ஒலி அதிர்வுகளைப் பணிவான முறையில் கேட்பதன் மூலமும், உன்னத அன்புத் தொண்டில் ஈடுபடுவதன் மூலமும் கடவுளைத் தெரிந்து கொள்ள இயலும்.

எனவே, கடவுளுக்கு அன்புடன் செய்யப்படும் பக்தித் தொண்டை வளர்க்க உதவும் மதக் கோட்பாடுகளே நிறைவானவை. நமது அன்பு எவ்வித சுயநல எதிர்பார்ப்புகளும் இல்லாமல் இருக்க வேண்டும். "என்னுடைய புலனின்பத்திற்கான பொருள்களை கடவுள் எனக்கு வழங்குவதால், அவரிடம் நான் அன்பு செலுத்துகிறேன்" என்று ஒருவேளை நான் கூறினால், அஃது உண்மையில் அன்பு ஆகாது. உண்மையான அன்பு, எவ்வித சுயநல நோக்கமும் அற்றது (*அஹைதுகி*). கடவுள் மிகப்பெரியவர்; கடவுள் என் தந்தை, அவரிடம் அன்பு செலுத்துவது என் கடமை, அதில் வியாபாரம் இருக்கக் கூடாது. "கடவுள் தினமும் எனக்கு உணவு தருகிறார், எனவே நான் கடவுளிடம் அன்பு செலுத்துகிறேன்"-- இல்லை. கடவுள் மிருகங்களுக்கும்கூட உணவளிக்கிறார். பூனைகளுக்கும் நாய்களுக்கும் கூட உணவளிக்கின்றார். கடவுள் எல்லாருக்கும் தந்தை, அவர் எல்லாருக்கும் உணவளிக்கிறார். எனவே, எனக்கு உணவளிக்கிறார் என்பதற்காக மட்டுமே கடவுளைப் புகழ்வது, அன்பல்ல. அன்பு என்பது எவ்வித உள்நோக்கமும்

அற்றதாக இருக்க வேண்டும். கடவுள் நமக்கு உணவளிக்கவில்லை என்றாலும், நாம் அவர்மீது அன்பு செலுத்த வேண்டும். அதுவே உண்மையான அன்பு.

சைதன்ய மஹாபிரபு கூறுவது போல், ஆஷ்லிஷ்ய வா பாத-ரதாம் பினஷ்டு மாம் அதர்ஷனாம் மர்ம-ஹதாம் கரோது வா, "பிரபுவே, நீங்கள் என்னை அரவணைத்தாலும் சரி, புறக்கணித்தாலும் சரி, என் முன் தோன்றாமல் என் இதயத்தையே நோகச் செய்தாலும் சரி, எல்லாச் சூழ்நிலைகளிலும் நான் உங்களை நேசிக்கின்றேன்." இதுவே கடவுளின் மீதான தூய அன்பு. இவ்வாறு கடவுளை நேசிக்கும் தளத்திற்கு நாம் வந்து விட்டால், எப்போதும் முழு ஆனந்தத்துடன் இருப்போம். கடவுள் எவ்வாறு பூரண ஆனந்தத்தில் இருக்கின்றாரோ, அவ்வாறே நாமும் பூரண ஆனந்தத்தில் இருப்போம். இதுவே பக்குவமான நிலை.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)

# பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால்

### சென்னை மக்களைக் கவர்ந்த சிறப்பு சத்சங்க நிகழ்ச்சி

மனிதன் தனது அன்றாட வாழ்க்கைத் தேவைக்காக அல்லும்பகலும் அரும்பாடுபட்டு உழைக்கின்றான். வாழ்க்கை என்பதோ பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட குறுகிய காலமே. ஆனால் அவ்வளவுதான் வாழ்க்கையா? மரணத்துடன் வாழ்க்கை முடிந்துவிடுகின்றதா? அல்லது மரணத்திற்குப் பின் ஏதேனும் வாழ்க்கை உள்ளதா? இதைப் பற்றி மக்கள் யோசிப்பதே இல்லை. அதற்கு விடையளிக்கும் வகையில். "பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால்" என்னும் தலைப்பில் மாபெரும் நிகழ்ச்சி ஒன்று இஸ்கான் சென்னைக் கிளையின் சார்பாக நடத்தப்பட்டது.

மே மாதம் 2ஆம் தேதியன்று சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில், பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பாலுள்ள உண்மையை அறிந்து கொள்ள ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். ஸ்ரீல பிரபுபாதரின் சீடரும் இஸ்கான் மூத்த சந்நியாசிகளில் ஒருவருமான ஜப்பானைச் சார்ந்த தவத்திரு. பானு ஸ்வாமி அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரையாற்றினார். (அவரது உரை அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது) அவரது உரைக்கு முன்பாக, "யார் முட்டாள்?" என்னும் தலைப்பில் சிந்திக்கத் தூண்டும் ஒரு நாடகமும், ஹரி நாம சங்கீர்த்தனமும் சிறப்பாக நடந்தேறின. நவீன இசைக் கருவிகளைக் கொண்டு, அமெரிக்காவைச் சார்ந்த ஏகலவ்ய தாஸ் அவர்கள் மேற்கத்திய இசையையும் கிழக்கத்திய இசையையும் இணைத்து வழங்கிய ஹரி நாம சங்கீர்த்தனம் வந்திருந்த மக்களுக்கு எதிர்பாராத விருந்தாக அமைந்தது.


நிகழ்ச்சிக்கு வருகை புரிந்தோர் அனைவருக்கும், ஸ்ரீல பிரபுபாதர் அருளிய "பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால்" என்னும் புத்தகம், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை, இஸ்கான் குறித்த விளக்கக் கையேடு, மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டன. இதுபோன்ற பிரம்மாண்டமான அற்புத பலனை நல்கும் சத்சங்க நிகழ்ச்சியினை சென்னைவாசிகள் இதுவரை கண்டதில்லை என்றும், இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்தப்பட வேண்டும் என்றும் பலர் கோரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.





**மேலே:** சத்சங்கத்தில் கலந்து கொண்ட ஒரு பிரிவினர்
**இடது:** தவத்திரு பானு ஸ்வாமி

# பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால்



### விஞ்ஞானிகளால் விடையளிக்க முடியாத உண்மை

**வழங்கியவர்: தவத்திரு பானு ஸ்வாமி**

பிறப்பு இறப்பைப் பற்றியும், அவற்றிற்கு அப்பால் இருக்கக்கூடிய உண்மையைப் பற்றியும் தற்போது ஆராய உள்ளோம். குழந்தைகள் பிறக்கின்றன, விலங்குகளும் பிறக்கின்றன, செடி கொடிகள்கூட பிறக்கத்தான் செய்கின்றன; இதனால் பிறப்பைப் பற்றி அனைவரும் அறிவர். அதுபோன்றே மரணமும் அனைவரும் அறிந்ததே. மரணமடைந்த பின், இந்தியாவில் உடலை எரித்து விடுவர், மற்ற இடங்களில் புதைத்து விடுவர், வேறுசில இடங்களில் கழுகுகள் சாப்பிடத் தூக்கியெறிந்து விடுவர். இத்தகு பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவில் வாழ்க்கை அமைந்துள்ளது. பிறப்பு என்றால் என்ன என்பதையும், இறப்பு என்றால் என்ன என்பதையும் நாம் அறிவோம். ஆனால் வாழ்க்கை என்றால் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளாமலேயே உள்ளோம்.

## மனிதர்கள் இரசாயனக் கலவையா?

வாழ்க்கை என்பதை விளக்குவதற்கு, நமது உடலை ஆராய்ந்து ஒரு முடிவை வழங்க நவீன விஞ்ஞானம் முயற்சி செய்கின்றது. நமது பள்ளிக்கூடங்களில் நாம் இரசாயனங்களிலிருந்து தோன்றிய தாகக் கற்றுக் கொடுக்கின்றனர். சில இரசாயனங்கள் கலந்து அமினோ அமிலங்கள் உருவானதாகவும், அதன் பின் சின்னஞ்சிறு செல்கள் உருவான தாகவும், அவையெல்லாம் சேர்ந்து சிக்கலான செல்கள் தோன்றியதாகவும் கூறுகின்றனர். செல்கள் இணைந்து மரம் செடிகொடிகளாகவும், பிறகு விலங்குகளாகவும் பரிணமித்து, அதன் பிறகு மனித உருவம் எடுத்ததாக யூகிக்கிறார்கள். இவ்வாறு உயிர்கள் தோன்றியதற்குக் காரணம் ஏதுமில்லை என்றும் இவையனைத்தும் தற்செயலாக நிகழ்ந்தவை என்றும் கூறுகின்றனர்.

கணித ரீதியாகவும் சரி, உயிரியல் ரீதியாகவும் சரி, இக்கூற்றுகள் பொருத்தமற்றவை. அப்படியே நாம் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டாலும், மனிதர்கள் வெறும் இரசாயனக் கலவை தான் என்று நாம் முடிவு செய்துவிட முடியாது. அத்தகு முடிவிற்குப் பின்னால் பல சிக்கல்கள் உள்ளன. நம்முடைய உடலை கனிமங்களாக பிரித்தெடுத்தால், சுண்ணாம்பு, இரும்பு, கந்தகம், தண்ணீர் மற்றும் சில வேதிப் பொருள்களும் கிடைக்கும். இந்த இரசாயனங்களின் மொத்த மதிப்பு வெறும் 210 ரூபாய் மட்டுமே. அப்படியெனில், நம்முடைய மதிப்பும் வெறும் 210 ரூபாய்தானா? இதுதான் நம் எல்லோருடைய மதிப்பா? மனித வாழ்வைப் பற்றிய இத்தகு ஆராய்ச்சியில் எந்த அர்த்தமும் இல்லை. இரசாயனக் கலவைக்கு மதிப்பேது? நாம் வெறும் இரசாயனக் கலவை கிடையாது.

## விஞ்ஞானத்தினால் விடையளிக்க முடியாதவை

இந்தப் பிரபஞ்சம் மிகப் பெரியது என்றும், ஏறக்குறைய 865,000,000, 000,000,000,000,000 ச.கி.மீ. சுற்றளவு உடையது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அந்த பெரிய பிரபஞ்ச வெளியின் நடுவில் விண்வெளி மண்டலம் (கேலக்ஸி) உள்ளது. விண்வெளி விஞ்ஞானியான ஸ்டீபன் ஹௌகிங் என்பவர், கிட்டத்தட்ட நூறு கோடி விண்வெளிகள் உள்ளன என்றும், அவை ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன என்றும் கூறுகிறார். அந்த விண்வெளியின் நடுவிலுள்ள ஒரு நட்சத்திரத்தில் என்ன நடக்கிறது என்றுகூட நம்மால் கற்பனை செய்ய முடியாது. அத்தகைய ஒரு பெரிய விண்வெளியின் மத்தியில், ஏதோ ஒரு மூலையில் சூரியக் குடும்பத்தைச் சார்ந்த பூமியில் நாம் வசித்து வருகிறோம். இந்த பூமியில்கூட மனிதர்கள் பல்வேறு நாடுகளில் வசித்து வருகிறார்கள்.

மொத்தப் பிரபஞ்சத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் வாழும் பகுதி ஒன்றுமே இல்லை. நமது வாழ்நாளை ஒப்பிட்டுப் பார்த்தால் அதுவும் ஒன்றுமே கிடையாது, அப்படியெனில் வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன? நாம் பிறந்தோம், இறந்தோம் ஆனால் நாம் யார்? நாம்

ஏன் வாழ்கிறோம்? நாம் வெறுமனே பரிணாமக் கொள்கையை எடுத்துக் கொண்டு போகலாமா? நாம் எங்கிருந்து வந்தோம்? குரங்கிலிருந்து வந்தோமா? பறவைகளிலிருந்து வந்தோமா? நாயி லிருந்து வந்தோமா? எங்கே போகப் போகிறோம்? நம்மை நாமே அழித்துக் கொள்ள போகிறோமா? அல்லது பரிணாமக் கொள்கை மூலம் வளர்ச்சி பெற்று வேறொரு விசித்திரமான பிராணி ஆகப் போகிறோமா? இவற்றிற்கெல்லாம் விஞ்ஞானிகளிடத்தில் பதில் கிடையாது.

## விடையளிக்கும் சாஸ்திரங்கள்

வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்ற கேள்வியை பலர் கேட்கின்றனர். ஜடத்தைப் பற்றிய சில தகவல்களை வழங்கும் விஞ்ஞானிகளால் இதற்கு பதிலளிக்க முடியாது. வாழ்க்கை என்றால் என்ன? அதன் குறிக்கோள் என்ன என்பதை அவர்களால் சொல்ல முடியாது. ஆனால் நம்மிடம் வேதங்கள், புராணங்கள் போன்ற சாஸ்திரங்கள் இருப்பதால் அவற்றிற்கு விடையளிக்க முடியும். நமது அறிவிற்கு அவையே மூலமாகத் திகழ்கின்றன. எதற்கு விஞ்ஞானிகளால் விடையளிக்க முடியாதோ, அதற்கு சாஸ்திரங்களால் விடையளிக்க முடியும். வெறும் ஜடப்பொருளைப் பற்றி பேசாமல், மற்ற விஷயங்களைப் பற்றியும் வாழ்வின் குறிக்கோளைப் பற்றியும் சாஸ்திரங்கள் பேசுகின்றன. வேத சாஸ்திரங்களின் சாராம்சம் என்பதால் பகவத் கீதை மிகவும் அற்புதமானதாகும். பகவத் கீதையில் அர்ஜுனன் குழம்பிய நிலையில் காணப்பட்டான். அவன் மிகப்பெரிய போர்வீரன் என்றபோதிலும், தன்னுடைய சொந்த உறவினர்களைக் கொலை செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருந்ததால், மிகவும் குழம்பிய நிலையில் இருந்தான். அத்தகைய குழப்பமான நிலையில், அவன் கிருஷ்ணரை அணுகி, "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். கிருஷ்ணர் அவனுக்கு அறிவியலைக் கற்றுத் தரவில்லை. மாறாக, வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றி உபதேசித்தார்.

## நாம் உடலல்ல, ஆத்மா

கிருஷ்ணருடைய முதல் உபதேசமே மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. வருத்தத்திலிருந்த அர்ஜுனனிடம், கிருஷ்ணர், "தான் யார் என்பதை தெரிந்து கொள்ளாமல் வாழும் நீ ஒரு முட்டாள். நீ ஏன் வருத்தப்படுகிறாய்? உண்மையில் நீ இந்த உடல் கிடையாது என்பதால், எந்த உறவினர்களையும் நீ கொல்லப் போவதும் கிடையாது; மேலும், நீயும் மரணமடையப் போவது கிடையாது. உண்மையில் நீ ஒரு ஆத்மா. ஆத்மாவானது இந்த உடலுக்குள் பிறப்பிலிருந்து மரணம் வரை தொடர்கிறது, உடல் மட்டும் தான் மாறுகிறது. ஆத்மா என்றுமே மாறுவது கிடையாது. உடல் மரணமடையும் போது நீ மரணமடைவது கிடையாது; மரண நேரத்தில், ஆத்மா இந்த உடலை விட்டு வேறொரு உடலை ஏற்றுக்கொள்கிறது" என்றார். அவ்வாறு வேறொரு உடலுக்குள் நுழைவதே பிறப்பு எனப்படுகிறது. மேலும், பிறப்பு என்பது ஓர் உடையைக் களைந்து வேறொன்றை அணிவதுபோல என்றும் கிருஷ்ணர் விளக்குகிறார். பிறப்பு இறப்பு என்பது வெறும் உடலுக்குத் தான், ஆத்மா மரணமடைவது கிடையாது. அஃது எப்போதும் தொடர்ந்து போய் கொண்டே இருக்கும், என்றுமே அழிவடையாது. யாரேனும் உங்களைக் கொலை செய்யலாம், ஆனால் உண்மையில் உங்களை யாராலும் கொலை செய்ய முடியாது. உடல் மட்டுமே மரணமடையும், ஆத்மா என்றுமே மரணமடையாது.

## பூர்வ ஜன்ம நினைவுகள்

நீங்கள் சொல்வதெல்லாம் சாஸ்திரத் தில்தான் இருக்கின்றன, அவற்றை நிரூபிக்க முடியுமா என சிலர் வாதிடலாம். அவற்றை நிரூபிக்க முடியாது என்பது உண்மைதான். ஆத்மா பௌதிகக் கண்களுக்கு அப்பாற்பட்டது, நவீன விஞ்ஞானமோ பௌதிகக் கண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மனதை வைத்தும் ஆத்மாவைப் புரிந்து கொள்ள முடியாது; ஏனெனில், மனமும் பௌதிகமானது தானே. இருப்பினும், ஒரு சில விஷயங்களை வைத்து ஆத்மா இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஆத்மா இருப்பது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட 20ஆம் நூற்றாண்டின் பல்வேறு விஞ்ஞானி களில் ஒருவரான டாக்டர். அயன் ஸ்டீவென்சன் என்பவர், பூர்வ ஜன்ம நினைவுகளை வெளிப்படுத்திய சில குழந்தைகளை ஆராய்வதில் ஆர்வம் காட்டினார். விஞ்ஞானப்பூர்வமான தனது ஆராய்ச்சியில் அவர் 2,600



பேரை ஆய்வு செய்தார். முற்றிலும் விஞ்ஞானப்பூர்வமான ஆராய்ச்சியை மேற்கொண்ட அவர், ஆய்வுகளில் தவறிழைத்துவிடக் கூடாது என்பதற்காக, சின்னஞ்சிறு சந்தேகங்களை எழுப்பிய நிகழ்ச்சிகளைக்கூட புறக்கணித்து விட்டு ஆய்வு செய்தார். ஆச்சரியமளிக்கும் பல்வேறு பூர்வ ஜன்ம சம்பவங்களை ஆராய்ந்த பின்னர், மக்கள் ஓர் உடலை விட்டு வேறு உடலுக்கு மாறிக்கொண்டிருப்பது உண்மையே என்று அவர் முடிவு செய்துள்ளார். பூர்வ ஜன்ம நினைவுகளை ஞாபகப்படுத்திய பல்வேறு குழந்தைகளால், தாங்கள் இந்த ஜன்மத்தில் போகாத இடங்கள் குறித்த குறிப்பிட்ட தகவல்களையும் தெரிவிக்க முடிந்தது.

## மரண நேரத்தின் எண்ணங்கள் மறுவுடலைத் தீர்மானிக்கின்றன


ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்குச் செல்லும் இந்நிகழ்ச்சியை அவர் ஓர் உயிரியல் பரிணாமம் என்று முடிவு செய்தார். ஆனால் உண்மையில் நாம் ஆத்மா; ஓர் உடலிலிருந்து வேறு உடலுக்குச் செல்வது ஆத்மாவே. ஆத்மா ஓர் உடலை விட்டு மறு உடலுக்குச் செல்வதைப் பற்றி பகவத் கீதையில், ஸ்ரீ கிருஷ்ணர் மேலும் கூறுகிறார்: "மரண நேரத்தில் நீ எதை நினைக்கின்றாயோ, மரணத்திற்குப் பிறகு அடுத்த வாழ்வில் நீ அந்த நிலையை அடைவாய்." ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலுக்குச் செல்லுதல் என்பது தான்தோன்றித்தனமாக நடப்பதன்று. அத்தகு மாற்றத்திற்குப் பின்பு சில திட்டங்கள் அடங்கியுள்ளன. ஒருவருடைய பலமான எண்ணங்கள் அவரது அடுத்த உடலைத் தீர்மானிக்கும்.


ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள பரத மன்னரை இதற்கு நாம் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். மிகவும் பிரபலமான மன்னரான அவர், வயதான பின்னர், வானபிரஸ்தம் மேற்கொண்டு இமயமலையிலுள்ள கண்டகி நதிக்கு அருகில் நாராயணரை வழிபட்டு வந்தார். மிகவுயர்ந்த ஆன்மீக நிலையிலிருந்த அவருக்கு, ஒரு மான் குட்டியின் மீது பற்றுதல் ஏற்பட்டது. அந்த மான் குட்டியின் மீது கவனம் செலுத்த ஆரம்பித்த அவர், விஷ்ணு வழிபாட்டை மறக்க ஆரம்பித்தார். திடீரென்று அவர் மரணம் அடைந்தபோது, நாராயணரைப் பற்றி நினைக்காமல் அந்த மானைப் பற்றி நினைத்தார். அதன் விளைவாக அவர் அடுத்த பிறவியில் மானாகப் பிறவியெடுத்தார். ஒருவர் மரண நேரத்தில் எதை நினைக்கின்றாரோ அதே நிலையை மரணத்திற்குப் பிறகு அடைவார் என்பதைப் புரிந்துகொள்வதற்கு இது மிகவும் எளிமையான சம்பவமாகும். உடனே, சாஸ்திரத்தில் இருக்கும் அதனை எப்படி நம்மால் நம்ப முடியும் என்று நீங்கள் கேள்வி கேட்கலாம். இதே போன்ற சம்பவங்களை ஸ்டீவென்சன் அவர்களும் தமது புத்தகத்தில் கூறியிருப்பது ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாகும்.

## சில சம்பவங்கள்

இந்தியாவைச் சார்ந்த ஒரு சிறுவன் தனது பூர்வ ஜன்மத்தை நினைவு கூர்ந்தான். அப்பிறவியில் நெஞ்சில் துப்பாக்கியால் சுடப்பட்டு, பல்வேறு குண்டுகளால் துளைக்கப்பட்டு மரணமடைந்ததாக அவன் கூறினான். அந்த சம்பவத்தை ஆராய்ந்த போது, அங்கிருந்து 100 மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் அவ்வாறு ஒரு நபர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிய வந்தது. காவல்துறையினரின் பிரேத பரிசோதனையின்படி, அவனது மார்பின் நடுவில் பெரிய காயம் ஒன்றும், அதைச் சுற்றி பல சிறிய காயங்களும் இருந்தன. அவ்வாறு முந்தைய பிறவியில் மரணமடைந்திருந்த அவனது மார்பில் சில விசித்திரமான தழும்புகள் பிறவியிலிருந்து இருக்கின்றன. அவற்றை ஆராய்ச்சி செய்தபோது, ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்ட அந்த நபரின் காயங்களுக்கு, இச்சிறுவனின் தழும்புகள் ஒத்ததாக இருந்தன. முற்பிறவியில் ஏற்பட்ட காயங்கள், இந்த பிறவியில் தழும்புகளாகக் காணப்படுகின்றன.

கைகளில் விரல்களே இல்லாமல் பிறந்த ஒரு சிறுவன், தன்னுடைய முந்தைய பிறவியில் குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தபோது எல்லா விரல்களும் வெட்டப்பட்டு மரண மடைந்ததை நினைவு கூர்ந்துள்ளான். முந்தைய பிறவியில் ரயிலில் அடிபட்டு கால்கள் துண்டிக்கப்பட்டு மரணமடைந்த ஒரு பெண், அடுத்த பிறவியில் கால்கள் இல்லாமல் பிறந்தாள். மற்றொரு மனிதன், தனது முந்தைய பிறவியில், தலையில் அடிபட்டு, காது கிழிந்துபோய்





முந்தைய பிறவியில் குண்டுகள் துளைத்தைக் காட்டும் காவல் துறையின் வரைபடமும், அதே தழும்புகளுடன் விளங்கும் சிறுவனின் படமும்
**மேலே:** கைகளின்றிப் பிறந்த சிறுவனும் பாதி காதுடன் பிறந்த சிறுவனும்

மரணமடைய, மறுபிறவியிலும் பாதி காதுடன் பிறந்தான். ஒருவனது பூர்வ ஜன்ம செயல்கள் இந்த ஜன்மத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை இவை மறைமுகமாகக் காட்டுகின்றன. எனவே, நமது எண்ணம் குறித்து, குறிப்பாக மரண நேரத்திலான எண்ணம் குறித்து நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

## மரணத்தை நெருங்கிய அனுபவங்கள்

வேறு சில விஞ்ஞானிகள் மரணத்தை நெருங்கிய அனுபவங்களை ஆராய்ந்து வருகின்றனர். விபத்தினாலோ அறுவை சிகிச்சையினாலோ மக்கள் சில நேரங்களில், மரணத்திற்கு அருகில் செல்கின்றனர்; இதயம் நின்றுவிடுகிறது, மூளையும் அதனுடைய நரம்புகளும் நின்றுவிடுகின்றன. சில நிமிடங்கள், சில மணி நேரம், அல்லது சில நாள்கள்கூட அப்படியே இருந்துவிட்டு, மீண்டும் உயிர் பிழைத்த சம்பவங்கள் பல உள்ளன. கார் விபத்தில் மரணமடைந்த ரஷ்ய மருத்துவர் ஒருவர், திடீரென்று உயிர் பிழைக்க, அவரது மூளையில் எந்தவொரு பாதிப்புமே இல்லை. உடலிலிருந்து வெளிப்பட்டு அந்தரத்தில் மிதத்தல், நீண்ட குழாய் மூலம் பயணம் செய்தல், குழாயின் மறுபக்கத்தில் வெளிச்சத்தைப் பார்த்தல், அந்த வலியற்ற அற்புதமான அமைதியான மறு உலகத்தில் நண்பர்களையும் உறவினர்களையும் சந்தித்தல் போன்றவற்றை பலர் அனுபவித்துள்ளனர். சில சமயங்களில், அவர்கள், ஆன்மீக நபர்களையும், ஏன் கடவுளையும்கூட சந்திக்கின்றனர்; வாழ்க்கையின் மொத்த விஷயங்களையும் கண்ணோட்டமாக பார்க்கின்றனர். எனவே, இத்தகு ஆராய்ச்சிகளை நடத்திய மருத்துவர்கள், நாம் இந்த உடலல்ல என்னும் முடிவிற்கு வர வேண்டியுள்ளது. மரணத்தை நெருங்கிய அனுபவங்களை ஆராய்ச்சி செய்வதில் நிபுணராக விளங்கிய டாக்டர் கெனத்திரிங் அவர்களின் கூற்றுப்படி, இத்தகு அனுபவத்திலிருந்து மீண்டு வந்தவர்கள், மரணத்தோடு வாழ்க்கை முடிந்துவிடுவது அல்ல என்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறுகிறார்.

## சூட்சும உடலின் தாக்கம்

நாம் இந்த உடலல்ல. ஆத்மா என்னும் இதே உண்மையைத்தான் பகவத் கீதையிலும் கிருஷ்ணர் நமக்குத் தெரிவிக்கின்றார். மேலும், பகவத் கீதையிலிருந்து சூட்சும உடல் ஒன்று இருப்பதையும் நாம் அறிந்துகொள்கிறோம். சாஸ்திரங்களின் படி நாம் மூன்று நிலைகளில் உயிர் வாழ்கிறோம்: (1) நமது கண்களுக்குப் புலப்படும் பஞ்ச பூதங்களால் ஆன உடல், (2) அந்த உடலுக்கு உள்ளே நம்மால் பார்க்க இயலாத, மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவற்றால் ஆன சூட்சும உடல், மற்றும் (3) இந்த இரு உடலுக்குள்ளும் இருக்கும் ஆத்மா.

நாம் உயிர் வாழ்கிறோம் என்றால், அதற்கு இந்த மூன்றும் இணைந்திருக்க வேண்டும். மரணமடையும் போது, பஞ்ச பூதங்களாலான இந்த உடலை விட்டு சூட்சும சரீரமும் ஆத்மாவும் வெளியே செல்கின்றன. இந்த வெளிப்புற உடல் எவ்வாறு மிகவும் நுட்பமானதாக உள்ளதோ, அதுபோலவே சூட்சும உடலும் மிகவும் நுட்பமானதாகும். இந்த சூட்சும உடலில் நிறைய அடுக்குகள் உள்ளன; பல்வேறு அடுக்குகளில் பல்வேறு தகவல்கள் சேகரித்து வைக்கப்படுகின்றன. ஒரு அடுக்கில் விருப்பு வெறுப்புகளும், இன்னொன்றில் உடலமைப்புகளைப் பற்றிய தகவல்களும், மற்றொன்றில் கர்ம வினைகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. நாம் மரணமடைந்து வெளியே செல்லும்பொழுது, சூட்சும சரீரத்தோடு செல்வதால், விருப்பு வெறுப்புகளையும் தாங்கிக் கொண்டு அடுத்த உடலுக்குள் செல்கிறோம். எனவே, ஒரு பிறவியில் தண்ணீரில் மூழ்கி இறந்திருந்தால், அடுத்த பிறவியில் தண்ணீர் என்றாலே ஒருவித நடுக்கமும் பயமும் இருக்கும்.

## 100 வருடம் கடந்தும் பின்தொடரும் பதிவுகள்

தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வரும் ஜெஃப்ரிகேன் என்பவர், சுமார் 100 வருடங்களுக்கு முன்பு நடந்த அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது தான் ஒரு தளபதியாக இருந்ததை (தனது பூர்வ ஜன்மத்தை) நினைவுகூர்ந்துள்ளார். இருவரது முகபாவனையும் ஒரே மாதிரி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், 100 வருடங்கள் கழித்து அவர் மட்டும் வந்துள்ளார் என்பதல்ல, அவருடன் அவரது நண்பராக இருந்த மற்றொருவரும் வந்துள்ளார். தற்போதும் நண்பர்களாக உள்ள இவர்கள் இருவரும் நியூயார்க் நகரில் தீயணைப்புத் துறையில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு இடையில் எவ்வித குடும்ப உறவுகளும்



ஜெனரல் கோர்டான் (1860)



ஜெஃப்ரிகேன் (1995)

கிடையாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சூட்சும சரீரத்தில் இருக்கக்கூடிய பதிவுகளே 100 வருடங்கள் கடந்தும் இத்தகைய உருவ ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன. முகபாவனைகள் மட்டுமின்றி, நடத்தையும் கையெழுத்தும் கூட ஒரே மாதிரியாக இருந்தன. இந்த நினைவுகள் சூட்சும சரீரத்தில் வைக்கப்படுகின்றன. அவை எப்போது வேண்டுமானாலும் வெளிப்படலாம். அதுபோலவே கர்மங்களும் சூட்சும உடலில் வைக்கப்படுவதால், அவை நம்முடன் வருபவை.

## கர்மாவிலிருந்து விடுதலை பெறுதல்

கர்மங்களை ஒரே ஜன்மத்தில் தொலைத்து விட முடியாது என்பதால், அவை அடுத்தடுத்த ஜன்மங்களுக்கு தொடர்கின்றன. கர்மாவானது சூட்சும உடலுடன் தொடர்புடையது என்பதால், அது நம்முடன் வந்துகொண்டே இருக்கும். எனவே, கர்மாவிலிருந்து நம்மால் எப்போதுமே தப்பிக்க முடியாது. நாம் ஏதாவது ஒரு விஷயத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் அடுத்த பிறவியிலும் அதே விஷயத்தால் பாதிக்கப்படலாம். மாமிசம் என்னும் சொல் இங்கிருந்துதான் உண்டானது. சில மக்கள் அசைவ உணவை உண்கின்றனர், சமஸ்கிருதத்தில், மாம் என்றால் "நான்", என்றும் ச என்றால் "அது" என்றும் பொருள்படும். அதாவது, நான் இந்த பிறவியில் அதை சாப்பிடுகிறேன், அஃது அடுத்த பிறவியில் என்னைசாப்பிடட்டும்என்னும்ஒப்பந்தமே மாமிச என்பதன் பொருளாகும். நான் உடலல்ல, ஆத்மா என்பதை ஒருவன் உணரும்போது, சூட்சும உடலுடன் வரக்கூடிய கர்ம வினைகளை அழித்து, நம்மால் அமைதியை அடைய முடியும். பிறப்பு, இறப்பு என்பதை விட்டு வெளியேறி முக்தியும் அடைய இயலும். இருப்பினும், துரதிர்ஷ்டவசமாக, நான் ஓர் ஆத்மா என்பதைப் புரிந்துகொள்வதற்கு நிறைய தடங்கல்கள் உள்ளன. நம்மை அறியாமையை நோக்கி இழுத்துச் செல்லும் புலன்கள், மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவை அத்தகு தடங்கல்களாகும்.

## பல்வேறு யோக முறைகள்

புலன்களைக் கட்டுப்படுத்துவதற்கு சாஸ்திரங்கள் பல்வேறு வழிகளைக் கற்றுத் தருகின்றன. ஆரம்ப நிலையில், தர்மத்தின் விதிமுறைகளைக் கொண்டு புலன்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன; அது கர்மயோகம் எனப்படுகிறது. கர்ம யோகத்தில் வர்ணங்களும் ஆஸ்ரமங்களும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. ஓரளவு தூய்மையடைந்து ஸத்வ குணத்திற்கு உயர்ந்தவுடன் நாம் ஞானயோகத்திற்கு ஏற்றம் பெறுகிறோம். ஞானயோக நிலையில், வேதாந்தத்தைப் படித்து, நாம் இந்த உடலல்ல, ஆத்மா என்பதை உணர்கிறோம். மேலும், தவங்கள் செய்து புலன்களைக் கட்டுப்படுத்துகின்றோம். மற்றுமொரு பயிற்சி, அஷ்டாங்க யோகம் எனப்படும். அங்கே மனதையும் புலன்களையும் பிராணயாமம், தியானம் போன்றவற்றின் மூலம் கட்டுபடுத்த முயற்சி செய்கின்றோம். நம்முடைய மனதின் செயல்கள் அங்கே நிறுத்தி வைக்கப்படுகின்றன. இறுதியில், இறைவனுக்கு நேரடியாக தொண்டு செய்யும் பக்தி யோக வழிமுறையை அடைகின்றோம்.

## பக்தியின் உயர்நிலை

பகவானின் மீதுள்ள அன்பு, பக்தியைக் கடைப்பிடிப்பதற்குக் காரணமாக அமைகிறது. பகவானுடைய திருநாமங்களைக் கேட்டல், அவருடைய திருநாமங்களை உச்சரித்தல், அவரது விக்ரஹங்களுக்கு சேவை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியதே பக்தித் தொண்டு. ஞான யோகத்திலும் அஷ்டாங்க யோகத்திலும் மனம் செயல்படாமல் இருக்க பயிற்சி செய்கின்றனர். ஆனால் பக்தியின் வழிமுறை சற்று வேறுபட்டது. இங்கே புலன்களின் செயல்களையோ மனதின் செயல்களையோ நிறுத்த வேண்டியதில்லை. மாறாக, அவற்றை கிருஷ்ணரின் தொண்டில் ஈடுபடுத்துகிறோம். கிருஷ்ணரின் தொண்டில் ஈடுபடுவதே ஆத்மாவின் உண்மை நிலை என்பதால், அத்தகு தொண்டின் மூலம் அறியாமையிலிருந்து எளிதில் விடுபடுகிறோம். எத்தனை வழிமுறைகள் இருந்தாலும் பக்தியோகமே சிறந்தது என்று பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது.

## பக்தியோக பயிற்சிகள்

நமது காதுகளைக் கொண்டு பகவானின் திருநாமம், ஸ்ரீமத் பாகவதம் போன்றவற்றைக் கேட்டு ரசிக்கலாம். கண்களைக் கொண்டு பகவானின் அழகிய விக்ரஹங்களைக் கண்டு களிக்கலாம். வாயினால் பகவானின் கீர்த்தனத்தைப் பாடி மகிழலாம். மூக்கினால் பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஊதுபத்தியின் நறுமணத்தை நுகரலாம். நாக்கினால் பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரசாதத்தினைச் சுவைக்கலாம். முழு உடலையும் பகவானுக்காக நடனம் ஆடுவதில் பயன்படுத்தலாம். இவ்வாறாக, நம்முடைய மனம், புத்தி, புலன்கள் என எல்லாவற்றையும் பக்தியோகத்தில் உபயோகப்படுத்தலாம்.

நாம் யார் என்பதை பகவத் கீதையின் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும். அதுமட்டுமின்றி பிறப்பையும் இறப்பையும் நிறுத்த முடியும். எல்லாவிதமான தர்மங்களையும் விட்டுவிட்டு தன்னிடம் சரணடையுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில் கூறுகிறார். இவ்வாறு செய்வதன் மூலம் பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால் நம்மால் செல்ல முடியும். பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால் செல்வது ஒன்றும் கடினமானதல்ல. பகவத் கீதையிலிருந்து இதனைக் கற்றுக் கொள்ள முடியும். பக்தியோகத்தின் மூலம் ஆத்மாவையும் கடவுளையும் புரிந்துகொண்டு, பிறப்பையும் இறப்பையும் கடந்து செல்ல முடியும்.

தவத்திரு. பானு ஸ்வாமி அவர்கள், ஜப்பானிய குடும்பத்தில் பிறந்தவர். ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரான இவர், சமஸ்கிருதம், வங்காள மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். உலகின் பல்வேறு இடங்களுக்குச் சென்று கிருஷ்ண பக்தியைப் பரப்புவது மட்டுமின்றி, பூர்வீக ஆச்சாரியர்களின் புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வருகிறார்.

# பகவத் கீதையை வைத்து உறுதிமொழி எடுத்த பிரதமர்





தென் அமெரிக்க கண்டத்தின் வடக்குப் பகுதியில், அட்லாண்டிக் பெருங்கடலில், தீவுகளால் அமையப்பட்டுள்ள ஒரு சிறிய நாடு திரினிதத் டோபகோ. கடந்த மே 26ஆம் தேதியன்று, திருமதி. கமல பேர்ஸத் பிஸ்ஸேஸ்ஸர் அந்நாட்டின் முதல் பெண் பிரதம மந்திரியாக பதவியேற்றார். போர்ட் ஆப் ஸ்பெயினில்நடந்தபதவியேற்புவிழாவில், இஸ்கான் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய பகவத் கீதை உண்மையுருவில் புத்தகத்தின் ஸ்பானிய மொழிப் பிரதியைக் கொண்டு அவர் உறுதிமொழி எடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எதையும் விட்டுவிடாமல் சொந்த கருத்துக்களைச் சேர்க்காமல் பகவத் கீதையை உள்ளது உள்ளபடி வழங்கிய ஸ்ரீல பிரபுபாதரின் கருணையினால், இன்று உலகெங்கிலும் பகவத் கீதையின் புகழ் வேகமாக பரவி வருவதற்கு இந்த பதவியேற்பு விழா ஒரு சாட்சியாகும். உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பகவத் கீதை சென்றடைவது நாம் அனைவரும் பெருமைப்படத் தகுந்த ஒன்றாகும்.

# வேலூரில் கிருஷ்ணருக்காக புதியதோர் இடம்




சென்னை இஸ்கான் கோவிலின் தலைவரான சுமித்ர கிருஷ்ண தாஸ் அவர்களின் தலைமையில் வேலூர் கோவிலுக்கான புதிய இடத்தில் கீர்த்தனம் நடந்தபோது எடுத்த படம்.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் உலகெங்கிலும் உள்ள மக்கள் அனைவருக்கும் மனித வாழ்வின் குறிக்கோளை கற்றுக் கொடுப்பதற்காக பல்வேறு கோவில்களை நிறுவி வருகின்றது. அதன் ஒரு பகுதியாக கடந்த மே மாதம் 26ஆம் தேதியன்று வேலூர் இஸ்கான் சார்பில் கிருஷ்ணர் கோவில் கட்டுவதற்கான புதிய நிலம் வாங்கப்பட்டுள்ளது. சுமார் ஏழு ஏக்கர் பரப்பளவில், வேலூர் விமான நிலையம் அருகில், ராமாபுரம் கிராமத்தில் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ள இவ்விடம் காண்போரின் இதயத்தைக் கவரக்கூடியதாக உள்ளது. இடத்தைப் பதிவு செய்த பின்னர் அவ்விடத்தில் ஹரிநாம சங்கீர்த்தனமும் பூஜையும் நடத்தப்பட்டு, பிரசாதமும் விநியோகிக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்காக அங்கு விரைவில் ஓர் அற்புதமான கோவிலை வடிவமைக்க இருப்பதாகவும், அத்திருக்கோவில் வேலூர் வாசிகளுக்கு நல்லுதவியாக அமையும் என்றும், கோவில் மேலாளரான அகிஞ்சன கிருஷ்ண தாஸ் அவர்கள் தெரிவித்தார்.





**தனது வாழ்வின் இறுதி காலத்தில், யாராவது என்னை மட்டும் எண்ணிக் கொண்டு உடலை விட்டால், உடனடியாக அவன் என்னுடைய இயற்கையை அடைகிறான். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை.**

**-- பகவத் கீதையில் (8.5) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**




**வரம் நல்குவோரில் சிறந்த எம்பெருமானே, எனக்கு ஏதேனும் வரமளித்தே ஆக வேண்டும் என்று தாங்கள் விரும்பினால், எனது அடி இதயத்தினுள்கூட பௌதிக ஆசைகள் இருக்கக் கூடாது என்பதற்காக நான் தங்களிடம் பிரார்த்திக்கின்றேன்—பகவான் நரசிம்மரிடம் பிரகலாதரின் பிரார்த்தனை (ஸ்ரீமத் பாகவதம் 7.10.7)**




**படிப்படியான பரிணாமத்தின் மூலம் 84 இலட்சம் உயிரினங்களைத் தாண்டி ஒருவன் மனிதப் பிறவியை அடைகிறான். கோவிந்தனின் தாமரைத் திருவடிகளில் சரணடையாத அடிமட்ட முட்டாள்களுக்கு அந்த மனித வாழ்க்கை வீணாகிவிடுகிறது—பிரம்ம வைவர்த்த புராணம்**




## கருத்து

இதுவே நம்பிக்கை. குருட்டு நம்பிக்கை அல்ல. மிகப் பெரிய மரத்தினை மிகச்சிறிய விதையினுள் கிருஷ்ணரால் வைக்க முடியும் என்னும் பட்சத்தில், யானையை ஊசி முனையில் கோர்க்க முடியாதா என்ன! பல்வேறு கிரகங்களை தனது சக்தியைக் கொண்டு வானில் மிதக்க வைப்பதில் ஏதேனும் ஆச்சரியம் உள்ளதா என்ன!

பக்தர்கள் மட்டுமே இவற்றை எளிமையாகப் புரிந்து கொள்ள முடியும். அபக்தர்களோ இஃது எவ்வாறு சாத்தியம் என்று குதர்க்கமாகக் கேள்வி கேட்பர். மனிதர்களால் யோசிக்க முடியாததை இறைவனால் செய்ய முடியும் என்னும் நம்பிக்கையே ஆஸ்திகத்தின் தொடக்கமாகும்.

# ஸ்ரவண கீர்த்தன முகாம்

இஸ்கான் பக்தர்களில் பெரும்பாலானோர் தங்களது வெளியுலக வேலைப் பளுவின் காரணத்தினால் அதிகமான சத்சங்கத்தினைப் பெற இயல்வதில்லை. அத்தகு சத்சங்கத்திற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில், தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி, இஸ்கான் சேலம் கிளையின் சார்பாக, மே 17ஆம் தேதியிலிருந்து 24ஆம் தேதி வரை, ஸ்ரவண கீர்த்தன முகாம் ஒன்று சேலம் அருகிலுள்ள ஏற்காட்டில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. கிருஷ்ணரின் திருநாமங்களைப் பாடுவதற்கும் கிருஷ்ண பக்தியின் தத்துவங்களைக் கேட்பதற்கும், ஸ்ரவண கீர்த்தன முகாம் ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது. வீடு மற்றும் அலுவலகத்தின் பிரச்சனைகளை





**மேலே:** நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பக்தர்களில் சிலர்
**வலதுபுறம் மேலே:** தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி (இடது), தவத்திரு பக்தி வினோத ஸ்வாமி (வலது)

ஒரு வாரம் துறந்த பக்தர்கள், தினசரி நிகழ்ச்சிகளில் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்கேற்றனர். மாலை வேளைகளில் நகர சங்கீர்த்தனம் ஏற்பாடு செய்யப்பட்டு, அத்துடன் பல்வேறு புத்தகங்களும் விநியோகம் செய்யப்பட்டன. முகாமிற்கு வந்திருந்தோர் அனைவருக்கும் ஸ்ரீமத் பாகவதத்தின் மகத்துவத்தை எடுத்துரைத்த தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி அவர்கள், 18 புத்தகங்களைக் கொண்ட முழு பாகவதத்தையும் பல்வேறு பக்தர்கள் பெற்றுக் கொள்வதற்குத் தூண்டுகோலாக விளங்கினார். முகாமின் இறுதி நாள் நிகழ்ச்சியில் தவத்திரு. பக்தி வினோத ஸ்வாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கணக்கான பக்தர்களால் நிறைந்த இந்த சத்சங்க நிகழ்ச்சி. கலந்து கொண்ட ஒவ்வொருவரின் இதயத்திலும் நீங்காத இடம் பெற்றுவிட்டது என்றால் அது மிகையாகாது.



# தமிழ் மொழியும் பண்பாடும்

வழங்கியவர்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்

தொன்றுதொட்டு சீரும் சிறப்புமாகத் திகழும் நம் தமிழ் மொழி, செம்மொழி என்னும் சிறப்பைப் பெற்று அதனைத் தற்போது கொண்டாடி வருகிறோம். கலைஞர்கள், அறிஞர்கள், புலவர்கள் எனப் பற்பல சான்றோர்களைப் பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் போற்றிப் புகழும் இத்தருணத்தில், செம்மொழியான தமிழ் மொழி மெல்லமெல்ல கரைந்து வருவது எவராலும் மறுக்க முடியாத கசப்பான உண்மை. கடையேழு வள்ளல்களைக் கண்ட தமிழ்த்தாய், தற்போது ஈகைத் தன்மையே இல்லாதவர்களைக் காண்கிறாள். கண்ணகியையும் கோப்பெருந்தேவியையும் கண்ட தமிழ்த்தாய், தற்போது கற்பற்ற மங்கையர்கள் பாராட்டப்படுவதைக் கேட்கிறாள். இனிமையான பக்திப் பாடல்களால் அலங்கரிக்கப்பட்ட தமிழ்த்தாய், தற்போது கொச்சையான ஆபாசமான பாடல்களால் சிதறடிக்கப்படுகிறாள். ஏன் இந்த சீர்கேடு? இந்த சீர்கெட்ட நிலை குறித்து சற்று அலசிப் பார்ப்போம்.

## மொழியின் முக்கியத்துவம்

மொழி என்பது தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாகும். எத்தகு தகவல்கள் ஒரு குறிப்பிட்ட மொழியின் மூலம் பரிமாறிக்கொள்ளப் படுகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு, அந்த மொழி முக்கியத்துவம் பெறுகின்றது. சாதாரண உலகாயதத் தகவல்களை அளிக்கக்கூடிய மொழிகள் காலத்திற்கு நிலைத்திருப்பதில்லை. மனதிற்கு இதமளிக்கக் கூடிய, நுண்மையான அறிவுத் திறனை வளர்க்கக் கூடிய, உயர்ந்த உண்மைகளை விளக்கக்கூடிய இலக்கியங்கள் காலத்தால் அழிவு பெறுவதில்லை. அத்தகைய உயர்ந்த இலக்கியங்களை எந்த மொழியின் மூலம் மக்கள் அறிந்து கொள்கின்றனரோ, அந்த மொழி முக்கியத்துவத்தை அடைகின்றது. இவ்வாறாக, இலக்கியங்களில் உள்ள கருத்துகளாலேயே ஒரு மொழி முக்கியத்துவம் பெறுகின்றதேயொழிய, தனிப்பட்ட முறையில் வெறும் மொழியாக மட்டும் எந்தவொரு மொழியும் ஒருபோதும் முக்கியத்துவம் பெறுவதில்லை. கிரேக்கம், இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளுடன் இணைந்து நமது தமிழ் மொழியும் செம்மொழியாக அறியப் படுவதற்கு இதுவே காரணம்.

## தமிழ் மொழியின் சிறப்புகள்

தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்கள் கருத்துமிக்கதாகவும், தமிழ் மொழியினைப் பின்பற்றிய முன்னோர்கள் பண்பாடு மிக்கவர்களாகவும் விளங்கியதால், தமிழ் இன்றும் சிறப்புமிக்க மொழியாக விளங்குகின்றது. செம்மொழி என்னும் தகுதியைத் தமிழுக்குப் பெற்றுத் தந்த இலக்கியங்கள் அனைத்தும் பல்வேறு கருத்துகளை நமக்கு நல்குகின்றன. அத்தகு கருத்துகள் கைவிடப்பட்டு, வெறும் மொழியாகத் தமிழை நாம் அணுகினோம் என்றால், தமிழ்த்தாய் தனது செம்மையை இழந்துவிடுவாளோ என்ற அச்சம் மனதில் எழுகின்றது. பல்வேறு அறிஞர்களாலும் புலவர்களாலும் எழுதப்பட்ட கருத்துப் பொதிந்த இலக்கியங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பேருதவியாகத் திகழ்ந்தன. அவ்விலக்கியங்களின் மேன்மையை நாம் பாராட்டுகின்றோம், இத்தகு மேன்மை பொருந்திய இலக்கியங்களை வழங்கிய நமது முன்னோர்களைக் கண்டு பெருமைப்படுகின்றோம். அதே சமயத்தில் அந்த இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை நாம் பின்பற்றுவதில்லை என்பதை நினைக்கும்போது ஏற்படும் மனவேதனையை எழுத்துகளால் வடிக்க இயலாது.

## தமிழர்களின் உயர் பண்பாடு

தமிழர்களுக்கென்று ஒரு பண்பாடு உண்டு. ஒரு மொழியைப் பற்றிப் பேசும்போது அந்த மொழியுடன் கூடிய பண்பாடும் அவசியமாகும். பண்பாட்டினை மறந்துவிட்டு மொழியில் மட்டும் கவனத்தைச் செலுத்தினால், அறிஞர்கள் அதனை பக்குவமானதாகக் கருதுவதில்லை. இஸ்லாமிய பண்பாட்டினைக் கைவிட்டு விட்டு, யாரேனும் அரேபிய மொழியில் கவனத்தைச் செலுத்தினால், அது பக்குவமானதாகுமா? அதுபோலவே, தமிழர்கள் கொண்டிருந்த உயர் பண்புகளை நாம் ஒதுக்கிவிட்டோம் என்றால், அது தமிழ் மொழிக்கு எவ்விதத்திலும் பலனளிக்காது. அசைவ உணவு உண்ணுதல், சூதாடுதல், போதைப் பொருள்களை எடுத்துக்

கொள்ளுதல், தகாத பாலுறவு போன்ற தீய செயல்கள் அனைத்தும் பண்பாடற்ற மக்களின் பழக்கமாகும். அத்தகு தீய செயல்களுக்கு பாரதப் பண்பாட்டில் இடமில்லை, தமிழ் இலக்கியங்களிலும் இடமில்லை, திருவள்ளுவரும் இடமளிக்க வில்லை. அவ்வாறு இருக்கையில், தமிழகத்தில் அசைவ உணவுகள் தேவையா? மதுக்கடைகள் தேவையா? உயர் பண்பாடு என்றால், அழகான உடை உடுத்தி, அடுக்குமாடி கட்டிடம் கட்டி, அதிகமான செல்வத்துடன் வாழ்வதே என்று பலர் நினைப்பது வேதனைக் குரியதாகும்.

## ஆங்கிலம் வளர்ச்சி பெறுவது ஏன்?

தமிழ் வேண்டும், ஆனால் தமிழர்களின் பண்பாடு வேண்டாம் என்று நினைப்பது ஆகாயப் பூக்களுக்கு விருப்பப்படுவது போன்றதாகும். பண்பாட்டை ஓரமாக ஒதுக்கிவிட்டு, நவீன நாகரிகத்தின் அடிப்படையில் வாழ நினைக்கும் மனிதர்கள், அந்த நாகரிகத்துடன்ஒத்திருக்கும்மொழியினை மட்டுமே கற்றுக் கொள்ள விருப்பப்படுவர். அதன் காரணத்தினால் தான், இன்று தமிழகத்தில் ஆங்கிலம் கற்போர் மிகுந்து வருகின்றனர், தமிழ் வழிக் கல்வி காண்போரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. நகரங்களிலுள்ள அனைவரும் ஆங்கில வழிக் கல்வியை நோக்கிச் செல்வது ஏன்? இன்றைய நாகரிக வாழ்வில் பொருளீட்ட வேண்டுமெனில், ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம், தமிழ் தெரிய வேண்டியது அவசியம் இல்லை என்பது தான் இதற்குக் காரணம்.



ஆங்கிலேயர்களின் பண்பாடு மக்களிடம் இருந்தால், ஆங்கில மொழி தான் வளர்ச்சி பெறும். தமிழ் எவ்வாறு வளர்ச்சி பெற முடியும்? தமிழ் வளம் பெற வேண்டுமெனில், தமிழகம் தமிழர்களின் பண்பாட்டின் படி அமைதல் அவசியம்.

## பொருத்தமற்ற தமிழோ!

ஆங்கிலேயர்களின் பண்பாட்டைப் பின்தொடரும் தமிழகத்திற்கு, தமிழ் என்பது பொருந்தாத மொழியாகவே விளங்கும். ஆங்கிலப் பண்பாட்டிற்கு ஆங்கிலமே பொருத்தமான மொழி, தமிழரின் பண்பாட்டிற்கு தமிழ் பொருத்தமான மொழியாகத் திகழும். அசைவ உணவை பழக்கமாகக் கொண்ட ஆங்கிலப் பண்பாட்டில், மாட்டுக் கறிக்கு beef என்றும், ஆட்டுக் கறிக்கு mutton என்றும், கோழிக் கறிக்கு chicken என்றும், பன்றிக் கறிக்கு pork என்றும் வெவ்வேறு பெயர்கள் உள்ளன. அசைவ உணவு என்பது தமிழர்களின் பண்பாட்டிற்கு உகந்தது அல்ல, குறிப்பாக பசுவை உண்பது என்பது பண்பாட்டிற்கு எதிரான செயல். எனவே, தமிழர்களின் பண்பாட்டில், பல்வேறு விலங்குகளின் கறிக்கு என்று தனிப்பட்ட பெயர்கள் கிடையாது. நவீன காலத்தில் மட்டுமே, அவ்விலங்கின் பெயருடன் கறி என்னும் சொல் இணைக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு தரப்பட்ட தவறான பாலுறவுகளுக்கும் தமிழில் வார்த் தைகள் கிடையாது. கையூட்டு (இலஞ்சம்), விவாகரத்து, கருக்கலைப்பு போன்றவை அனைத்தும் புதிதாக தமிழில் உலாவும் வார்த்தைகளாகும்.

## கைவிடப்படும் கருத்துகள்

பெரிதும் மதித்துப் போற்றப்படும் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு நல்ல கருத்துகளை மக்களுக்கு வழங்கு கின்றன. புகழ்பெற்ற சிலப்பதிகாரம், கீழ்காணும் மூன்று கருத்துகளை நிலைப்படுத்துகின்றது: 1) அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாகும்—பிழை செய்த அரசியல்வாதிகளை அறமே தண்டிக்கும், 2) உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர்—சோதித்து நிரூபிக்கப்பட்ட பத்தினியை உயர்ந்தோர் புகழ்வர், 3) ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்—ஒருவனது பாவச் செயல்கள் அவனை தேடி வந்து துன்புறுத்தும். இக்கருத்துகள் மக்களிடம் அறிவுறுத்தப்படுவதில்லை என்பதை அனைவரும் அறிவர்.

தெய்வத் தமிழ் என்று அறியப் படும் தமிழ் மொழி, ஆன்மீகத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது என்பதை தமிழ் இலக்கியம் கற்ற எவராலும் மறுக்க முடியாது. மதுரை மீனாட்சி கோவிலின் குளத்தில், சங்கப் பலகையில் ஏற்றி மிதக்கவிட்டு பரிசோதிக்கப்பட்ட பிறகே திருக்குறள்கூட ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. கம்ப இராமாயணம், நாலாயிர திவ்ய பிரபந்தம், பெரிய புராணம் போன்றவை தற்போதைய தமிழ்க் கல்வியில் அதிகளவில் இடம் பெறுவதில்லை. அவற்றில் கூறப் பட்டிருக்கும் கருத்துகள் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டன. இராமாயணம் என்னும் ஓர் இலக்கியத்தை கற்பனைக் கதை என்று கூறி விட்டு, சிலப்பதிகாரம் என்னும் மற்றோர் இலக்கியத்தை உண்மையாக ஏற்று, கண்ணகியை வழிபடுகின்றனர். கற்புக்கரசியான கண்ணகியை பாராட்டுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் கற்பின் சிறப்பை விளக்கும் சிலப்பதிகாரம் பெற்ற தமிழ்நாட்டில், தவறான பாலுறவுகள் ஊக்குவிக்கப்படுகின்றன, திருமணத்திற்கு முந்தைய பாலுறவில் தவறில்லை என்று பகிரங்கமாக அறிவிக்கின்றனர். என்னே அபத்தம்!

ஆன்மீக இலக்கியங்களையும் ஆன்மீகத்துடன் தமிழை வளர்த்த பெருங் கலைஞர்களையும் இன்றைய சமுதாயம் ஒதுக்கிவிட்டது. சிறப்பு வாய்ந்த தமிழ் நூல்களில் ஒன்றானதும் மக்களுக்கு நல்லறிவுரை வழங்கக் கூடியதுமான திருக்குறளுக்கு மேலோட் டமான முக்கியத்துவத்தை வழங்கு கின்றது. இருப்பினும், திருவள்ளுவர் அத்திருக்குறளில் கூறியுள்ள நன்னெறி களை யாரும் பின்பற்றுவதில்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இதயத்தில் ஒருவித வலியை உணரலாம்.

**கள்ளுண்ணாமை என்ற தலைப்பில், மது அருந்துதல் தவறு என்பதை உரைப்பதற்காக பத்துக் குறள்களை வடித்துக் கொடுத்த திருவள்ளுவர், அவரது புகழை வெளிப்புறமாகப் பாடி விட்டு, ஊரெங்கும் இருக்கும் மதுக்கடைகளில் தஞ்சமடையும் தமிழ்க் 'குடி'மகன்களை எப்படிக் காண்பார்?**

## திருக்குறளையாவது பின்பற்றலாமே?

திருக்குறளைப் படிப்பவர்களும் கேட் பவர்களும் பேசுபவர்களும் அதன்படி நடத்தல் அவசியம். ஊருக்குத்தான் உபதேசம், தனக்கல்ல என்று இருந்து விடல் நல்லதல்ல என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்:

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** (திருக்குறள் 391)

இச்சிறப்புமிக்க குறள், திருக்குறள் கற்பவர்களுக்கும் பொருந்தும். ஒழுக்கம், அடக்கம், பிறனில் விழையாமை (பிறர் மனைவியை நோக்காதிருத்தல்), விருந் தோம்பல், அன்புடைமை, செய்நன்றி யறிதல், பொறையுடைமை (மன்னித்தல்), அழுக்காறாமை (பொறாமை இல்லா திருத்தல்), தீவினையச்சம் (பாவத்தைக் கண்ட அச்சம்), ஈகை, புலால் மறுத்தல், வாய்மை, இன்னா செய்யாமை, கொல்லாமை என பற்பல நற்பண்புகள் திருக்குறளில் விளக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து அதன்படி நடத்தல் நன்மை பயக்கும்.

அசைவ உணவு உண்பது தவறு என்பதை 'புலால் மறுத்தல்', 'கொல்லாமை' ஆகிய இரண்டு தலைப்புகளில் இருபது குறள்களில் அற்புதமாக விளக்கியுள்ளார் திருவள்ளுவர். ஆனால் இன்றைய தமிழர்களோ பெரும்பாலும் அசைவ உணவு உண்பவர்களாகத் தான் இருக்கின்றனர். தமிழை வளர்ப்பதாகக் கூறுபவர்கள், மேடையில் திருவள்ளுவரைப் பற்றி பேசிவிட்டு, நிகழ்ச்சி முடிந்தவுடன் வந்தோர் அனைவருக்கும் அசைவ உணவு வழங்குவதைக் கண்டு தமிழ்த்தாயும் திருவள்ளுவரும் பெருமிதம் கொள்வார்களா?

கள்ளுண்ணாமை என்ற தலைப்பில், மது அருந்துதல் தவறு என்பதை உரைப்பதற்காக பத்துக் குறள்களை வடித்துக் கொடுத்த திருவள்ளுவர், அவரது புகழை வெளிப்புறமாகப் பாடி விட்டு, ஊரெங்கும் இருக்கும் மதுக்கடைகளில் தஞ்சமடையும் தமிழ்க் 'குடி'மகன்களை எப்படிக் காண்பார்?

## தமிழின் மிக முக்கிய பகுதி

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் மனிதன் அடைய வேண்டியவையாக கூறப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் அறக் கொள்கை களைப் பின்பற்ற வேண்டும், அறக் கொள்கைகளே அனைத்திற்கும் அடிப்படை. அறத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருவன் பொருளீட்டுவதும், அந்தப் பொருளைக் கொண்டு இன்ப மடைவதும் வழக்கம். எப்போது ஒருவன் அத்தகு இன்பத்தினால் களைப்படைந்து இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட ஒன்றை தேடுகின்றானோ, அப்போது அவன் வீடுபேறு (முக்தி) அடைவதற்கான முயற்சியில் ஈடுபடுவான்.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** (திருக்குறள் 2)

"தூய்மையான இறைவனின் நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் என்ன பயன்?" என்று வள்ளுவரே வினவுகிறார். எனவே, இலக்கியங்களைக் கற்பவர் இறைவனை வழிபடும் நிலைக்கு உயர்வு பெறுதல் மிகவும் அவசியம். அவ்வாறு இறைவனை வழிபடுவதன் மூலம் ஒருவர் வீடுபேறு அடைய முடியும்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தவர்** (திருக்குறள் 10)

"இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும், மற்றவர்களால் கடக்க முடியாது." பிறவிப் பெருங்கடலைக் கடப்பது (வீடுபேறு அடைவது) என்பது மிகவும் அவசியம்.

பிறவிப் பெருங்கடலைக் கடப்பது குறித்தும், இறைவனின் திருவடிகளை வழிபடுவது குறித்தும் திருவள்ளுவர் அதிக விளக்கத்தினை வழங்கவில்லை. அறம், பொருள், இன்பத்தைப் பற்றி விளக்கமளித்த வள்ளுவர் வீடுபேறு குறித்தும் விளக்கமளித்திருக்க வாய்ப்புள்ளது. ஒருவேளை அது காலத்தினால் அழிவுற்றிருக்கலாம்.

மொழியின் பலன் மக்களை இறைவனிடம் கொண்டு செல்வதற்காக என்பதை உணர்த்தவே தமிழ் முன்னோர்கள், வீடுபேறு அடைவதற் கான வாய்ப்பை நல்கக்கூடிய கம்ப இராமாயணம், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற இலக்கியங்களை வழங்கியுள்ளனர். அவை தமிழ் மக்களின் களஞ்சியங்கள் என்றால் அது மிகையன்று. அத்தகு இலக்கியங்கள் முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றியும் அவரை வழிபடுவது பற்றியும் அதன் மூலம் பிறவிப் பெருங்கடலைக் கடப்பது பற்றியும் நமக்கு விளக்கமளிக்கின்றன.

## இறுதியாகச் சில வரிகள்...

மனிதர்களை உண்ணும் காட்டுவாசி களுக்கும் மொழி உண்டு, அவர்களும் தங்களது மொழியினைப் பெருமையாக எண்ணிக் கொண்டுள்ளனர். ஆனால் அம்மொழியினைப் பேசுவோரிடத்தில் உயர்ந்த பண்பாடு இல்லாத காரணத் தினால், அம்மொழிகள் முக்கியத்துவம் பெறுவதில்லை. நமது தாய்மொழியான தமிழ் ஒரு செம்மொழி என்பதை கருத்தில் கொண்டு, காட்டுவாசிகளைப் போல (மது, மாது, மாமிசம் என்று) வாழாமல், மொழிக்கு ஏற்ற பண்பாட்டுடன் நாம் வாழ்ந்தால், அது தமிழ் மொழிக்கும் சிறப்புத் தரும், நாமும் உயர்வு பெறலாம்.

# மக்கள் மறந்துபோன திருக்குறள்களில் சில...

**தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்**

தீய செயல்கள் தீமையை விளைவிப்பதால், அந்தத் தீயவற்றைக் கண்டு தீயைக் காட்டிலும் அஞ்சிட வேண்டும். (202)

**தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்**

தனது உடலை வளர்ப்பதற்காக பிற உயிரின் உடலை உணவாக்கிக் கொள்பவன் எவ்வாறு கருணை உடையவனாக இருக்க முடியும். (251)

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்**

புலால் உண்ணாதவர்களையும் அதற்காக உயிர்களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும். (260)

**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

நோய் நிறைந்த உடம்புடன், வறுமையால், இழிந்த வாழ்க்கையை இன்று வாழ்பவர்கள், முற்பிறவியில் பல உயிர்களை கொலை செய்தவர்கள் என்று அறிந்தோர் கூறுவர். (330)

**அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ணேவல் செய்வார்கண் இல்**



ஆணவங்கொண்ட பெண்கள் இடுகின்ற ஆணைகளுக்கு அடங்கி இயங்குகின்ற பெண் பித்தர்களிடம் அறநெறிச் செயல்களையோ சிறந்த அறிவாற்றலையோ எதிர்பார்க்க முடியாது. (909)

**இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப் பட்டார் தொடர்பு**


இருமனங் கொண்ட பொதுமகளிருடனும் மதுவுடனும் சூதாட்டத்தினிடமும் தொடர்பு கொண்டு உழல்வோரிடமிருந்து நற்பண்புகள் அனைத்தும் விலகிவிடும். (920)

**துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்**

மது அருந்துவோருக்கும் நஞ்சு அருந்துவோருக்கும் வேறுபாடு கிடையாது என்பதால், மது அருந்துவோரின் உறக்கத்திற்கும் நஞ்சு அருந்துவோரின் இறப்பிற்கும் வேறுபாடு கிடையாது. (926)

**பின் குறிப்பு:** வீடுபேறு அடைவதற்கு உதவும் வேத சாஸ்திரங்களில் தலைசிறந்த ஸ்ரீமத் பாகவதத்தின்படி, அசைவ உணவு, சூதாட்டம், போதைப் பொருள்கள், தகாத பாலுறவு ஆகிய நான்கு பாவச் செயல்களும் அதர்மத்தின் நான்கு தூண்களாகும். இந்நான்கும், தர்மத்தின் தூண்களாகத் திகழும் வாய்மை, தூய்மை, தயை, தவம் ஆகிய நான்கு நற்செயல்களை அழித்துவிடக் கூடியவை. அதர்மத்தின் தூண்கள் வலுப்பெற்றால், தர்மத்தின் தூண்கள் வலுவிழந்துவிடும் என்பதால், யாரொருவர் தங்களது உண்மையான நன்மையில் ஆர்வமுடையவராக உள்ளாரோ, அவர் இந்நான்கு பாவச் செயல்களையும் அறவே ஒழித்துவிடுதல் அவசியம். தர்மத்தை நாம் முறையாகப் பின்பற்றினால், அதர்மத்திலிருந்து நம்மைப் பாதுகாத்தல் எளிமையாக அமையும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்க விரும்புவோர் அனைவரும் இதற்குப் பயிற்சியளிக்கப்படுகின்றனர். வாய்மை, தூய்மை, தயை, தவம் ஆகிய நான்குடன் இணைந்து பரம்பொருளான இறைவன் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தொண்டாற்றுதல் என்னும் உண்மையான தர்மத்தில் பயிற்சியளிக்கப்படும் மக்கள், அசைவ உணவு, சூதாட்டம், போதைப் பொருள்கள், தகாத பாலுறவு ஆகிய பாவச் செயல்களிலிருந்து எளிமையாக விடுபட்டு வருகின்றனர். இந்நான்கு பாவச் செயல்களை முற்றிலும் கைவிட வேண்டும் என்று வள்ளுவரும் வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*ஸ்ரீ கிரிதாரி தாஸ், பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தமிழ்ப் பிரிவில் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*




# உணவு, உறக்கம், பாலுறவு, மற்றும் தற்காப்பிற்கான கல்வி திருப்தியளிக்காது




### ஸ்ரீல பிரபுபாதருக்கும் மகாதேவ தாஸ் என்னும் ஐரோப்பிய சீடரின் தாயாருக்குமிடையில் நடந்த உரையாடல்

ஜுலை 25, 1973 இலண்டன், இங்கிலாந்து

**ஸ்ரீல பிரபுபாதர்:** (தலைக்கு மேலே பறந்த விமானம் பெருத்த ஒலியைக் கிளப்ப) விமானங்கள் எழுப்பும் ஓசையின் தொல்லை சுவிட்சர்லாந்தில் இல்லை. அங்கு மலைகள் இருப்பதால், விமானங்கள் குறைவான உயரத்தில் பறக்க முடியாது. அமெரிக்கா, இலண்டன் போன்ற இடங்களில் விமானங்கள் எழுப்பும் ஓசை மிகவும் தொல்லை கொடுக்கின்றது. முற்காலத்தில், மக்கள் தங்களது கிராமங்களில் திருப்தியுடன் வாழ்ந்தனர். இதுதான் நவீன காலத்தின் பெயரளவிலான முன்னேற்றம்.

**தாயார்:** இந்திய மக்கள் கிராமத்தில் வாழ்ந்ததைப் பற்றிக் கூறுகிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்தியாவில் மட்டு மல்ல, எல்லா இடங்களிலும் மக்கள் அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

**தாயார்:** எல்லா இடங்களிலுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம்.

**தாயார்:** வேதப் பண்பாட்டை இந்திய மக்கள் இன்றும் விரும்புகின்றனரா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்தியாவில் இன்னும் அந்தப் பண்பாடு உள்ளது.

**தாயார்:** உம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** கிராமவாசிகளிடம் பசுவும் நிலமும் இருக்கும். அஃது அவர்களின் பொருளாதார நிர்வாகத்திற்குப் போதுமானதாக இருந்தது. ஆனால், "நிறைய பணம் வேண்டுமானால் இங்கே வாருங்கள்," என்று ஆசை காட்டி தொழிலதிபர்கள் அவர்களை வசீகரிக்கின்றனர்.

இதனால் கிராமவாசிகள் நகரத்திற்குச் செல்கிறார்கள், கிராமங்களிலுள்ள உணவு உற்பத்தி அலட்சியம் செய்யப்படுகிறது. எனவே, தானியங்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. உண்மையில், அனைவருமே உணவு உற்பத்தி செய்வதில் ஈடுபட வேண்டும். ஆனால் தற்போதைய நவீன நாகரிக அமைப்பில் வெகு சிலரே உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர், மற்றவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தொழிலதிபர்கள் செயற்கை முறையில் பணத்தை அடைகின்றனர். "நூறு டாலர் பணம் தருகிறேன்," என காகிதப் பணத்தைத் தருகிறார்கள். அந்த துண்டுக் காகிதத்தை நம்பி சாதாரண மக்கள் ஏமாறுகின்றனர். "என்னிடம் நூறு டாலர் பணம் உள்ளது," என்று அவர்கள் நினைக்கிறார்கள். நூறு டாலர் என்பது என்ன? இது வெறும் காகிதம். இதை நம்பி சிலர் ஏமாறுகிறார்கள், சிலர் ஏமாற்றுகிறார்கள். இதுதான் சமூகம்.

**தாயார்:** ஏமாற்றப்படாமல் இருப்பதற்கு ஒருவன் மிகவும் புத்திசாலியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** புத்திசாலி என்றால் அவர் தனது சொந்த (விவசாய) நிலத்தில் வாழ வேண்டும். நகரத்திற்குச் சென்று காகிதத்தால் ஏமாற்றப்படாமல் இருக்க வேண்டும்.

**தாயார்:** இருப்பினும், ஏமாற்றுபவர் களைப் பற்றியும் நல்லவர்களைப் பற்றியும் இளைய தலைமுறையின ருக்குத் தெரியப்படுத்தலாமே...

**ஸ்ரீல பிரபுபாதர்:** மொத்த நாகரிகமும் மற்றவர்களை எப்படி ஏமாற்றுவது என்பதையே திட்டமிட்டுக் கொண்டுள்ளது. நவீன நாகரிகத்திலுள்ள அனைவருமே பாவிகள்தான். எமது வேத அறிவின்படி, நான்கு விதமான பாவச் செயல்கள் உள்ளன. தவறான உடலுறவு, மிருகங்களைக் கொல்லுதல், போதை பொருட்களை உட்கொள்ளுதல், சூதாடுதல் ஆகியவை பாவ வாழ்வின் தூண்களாகும்.

**தாயார்:** இவையின்றிகூட நீங்கள் சந்தோஷமாக வாழ முடியும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எங்களது மாணவர் களை நாங்கள் அப்படிதான் பயிற்சியளிக் கிறோம்.

**தாயார்:** இவ்வுலகில் நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பாருங்கள், உங்கள் மகனையே எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த பக்தர்கள் தரையிலே எங்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து கொள்ள லாம், படுத்துக் கொள்ளலாம். காய்கறிகள், பால் போன்றவற்றால் செய்யப்பட்ட எளிய உணவிலே திருப்தியடைகிறார்கள். கடவுளின் திருநாமத்தை ஹரே கிருஷ்ண என்று ஜபம் செய்கிறார்கள்.

**தாயார்:** என் மகன் மைக்கேல் மிகவும் சந்தோஷமாக இருப்பதை நான் பார்க்கின்றேன். அவன் சந்தோஷ மான குடும்பத்திலிருந்து வந்தவன், சந்தோஷமாகத் தானே இருக்க வேண்டும்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** தற்போது அவனது சந்தோஷம் முன்பைவிட அதிகம்.

**தாயார்:** ஆம், பார்க்க முடிகிறது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அவன் சந்தோஷமாக இருந்தான், ஆனால் தற்போது மிகவும் சந்தோஷமாக உள்ளான். அதுவே வித்தியாசம்.

**தாயார்:** ஆம்... இல்லை, அவன் மிகவும் சந்தோஷமாக இருக்க முடியும் என்பதை மறுக்கிறேன். அது முடியாது என நினைக்கிறேன். (மிகவும் சந்தோஷமாக உள்ளேன் என்று தலையசைத்த மகனைக் கண்டதும் ஏற்பட்ட சிரிப்பலையுடன்) நீ மிகவும் சந்தோஷமாக உள்ளாயா? என்னால் நம்ப முடியவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீ மகிழ்ச்சியாக இல்லையா?

**தாயார்:** அது சாத்தியம் என்று எனக்குத் தோன்றவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** உங்கள் மகன் இங்கு வந்துவிட்டதால் நீங்கள் வேண்டுமானால் மகிழ்ச்சியின்றி இருக்கலாம். ஆனால் அவன் மிகவும் சந்தோஷமாகவே உள்ளான்.

**தாயார்:** நீங்கள்தான் அப்படிக் கூறுகிறீர்கள், நான் அவ்வாறு கூறவில்லை. அவன் தன்னுடைய படிப்பைத் தொடரவில்லை என்பதை நினைத்து மட்டுமே நான் மிகுந்த ஏமாற்றமடைகிறேன். அவன் மகிழ்ச்சியாக இருப்பதில் எனக்கு வருத்தமில்லை. அவன் எங்கிருந் தாலும், அவன் சந்தோஷமாக இருக் கிறான் என்பதால் நானும் சந்தோஷ மடைகிறேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** படிப்பதன் குறிக்கோள் என்ன?

**தாயார்:** நீங்கள் படித்தவர், அதனால் பண்புடையவராக இருக்கின்றீர். இந்த முதிர்ந்த வயதிலும் இந்த உலகம் என்ன செய்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுமளவிற்கு நீங்கள் மிகுந்த அறிவுடையவராக உள்ளீர். ஆன்மீக வாழ்வை புரிந்து கொண்டவராக உள்ளீர். உங்களது புத்தகங்களிலேயே இதனைத் தெரிந்து கொள்ளலாம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆமாம்.

**தாயார்:** உங்களது தந்தை உங்களை படிக்க வைக்காமல் இருந்திருந்தால், உங்களால் இவ்வாறு செய்ய முடியுமா என்ன?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியல்ல, கல்வி தேவைதான்.

**தாயார்:** நான் உண்மையாகவே என் மகன் சந்தோஷமாக இருப்பதால் மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும் அவன் தனது கல்வியைத் தொடராதது எனக்குக் கவலையாக உள்ளது. எந்தத் திறமையும் இல்லாமல், இந்த இளைஞர்கள் உங்களைப் போன்ற வயதை எட்டிய பின்னர், என்ன செய்வார்கள்,?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆனால் உங்களுடைய கல்வி முறையில் பிரம்மாண்டமான பல்கலைக்கழகங்கள் இருந்தும், மாணவர்கள் ஏன் ஹிப்பிகளாக ஆகின்றனர்?*

**தாயார்:** ஹிப்பிகள் அமெரிக்காவில் மட்டுமின்றி எல்லா இடங்களிலும் எப்போதுமே இருப்பார்கள். ஆனால் திறமையுள்ளவர்களை முன்னுக்குக் கொண்டு வருதல் அவசியமல்லவா!

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்தியாவில் பெரிய பெரிய பல்கலைக்கழகங்கள் இல்லை, ஆனால் மேற்கத்திய நாடுகளில் மிகச்சிறந்த பல்கலைக்கழகங்கள் இருந்தும், அவர்கள் ஹிப்பிக்களாக ஆவது ஏன் என்பதே எனது கேள்வி.

**தாயார்:** நாங்கள் உங்களைப் பற்றி பேசுகிறோம், உங்களிடம் சக்தி உள்ளது. மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைப்பதால், உங்களைப் பின்பற்றுகிறார்கள். அவர்களுக்குக் கல்வி கொடுப்பது உங்களின் கடமை. உங்களது மாணவர்கள் ஹிப்பிகள் இல்லையே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** வெறுமனே உண்ணுதல், உறங்குதல், உடலுறவு கொள்ளுதல், பாதுகாத்தல் ஆகிய வற்றைக் கற்பிக்கும் கல்வி முறை பயனற்றது என்பதே எனது கருத்து.

**தாயார்:** நீங்கள் படித்தவர்தானே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆமாம்.

**தாயார்:** ஆனால் இவர்களில் எத்தனை பேர் படித்தவர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நான் படித்தவன்தான். ஆனால் உண்ணுதல், உறங்குதல், பாலுறவு கொள்ளுதல், தற்காத்தல் என்னும் இந்த விஷயங்களைப் படித்தவன் அல்ல நான். நான் வேறு விதமான கல்வியைக் கற்றவன்.

**தாயார்:** அப்படியெனில், தாங்கள் எவ்வாறு புத்தகங்களை மொழிபெயர்க்கின்றீர்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** புத்தகங்களை மொழி பெயர்ப்பதற்கான கல்வியறிவு சாதாரண கல்வியிலிருந்து வேறுபட்டதாகும். உண்மையான கல்வி பண்பாட்டை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். பணம் சம்பாதிப்பதற்காகப் பெறப்படும் கல்வி யாருக்கும் உண்மையான திருப்தி யை வழங்காது. அவ்வாறு திருப்தியை வழங்கியிருந்தால், இளைஞர்கள் ஏன் ஹிப்பிகளாக உள்ளனர் என்று ஏற்கனவே கேட்டேன்.

**தாயார்:** இந்த இளைஞர்களுக்குத் தாங்கள் கல்வி கற்றுக் கொடுக்கப் போகிறீர்கள் என்கிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், எனது தந்தை எனக்கு அத்தகு கல்வியை அளித்தார். அவர் என்னைத் தேநீர் (டீ) குடிக்கக்கூட அனுமதித்தது கிடையாது. கடவுளை அறிந்து கொள்ள உதவி செய்வதே கல்வி எனப்படும். நாங்கள் அத்தகு கல்வியை இங்கு இளைஞர்களுக்கு வழங்குகிறோம்.

---

* ஹிப்பிகள்—சமுதாயத்தின் மீது வெறுப்புற்று போதைப் பொருள்களிடமும் தவறான பாலுறவிலும் அடிமையாகி பித்தனாகத் திரியும் படித்த பணக்கார இளைஞர்கள் ஹிப்பிகள் எனப்படுகின்றனர், அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் இவர்களின் எண்ணிக்கை அதிகம்.

**தாயார்:** கடவுளை அறிவதற்கான கல்வியா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், அதுவே பிராமணர்களை உருவாக்கும் கல்விமுறை. கடவுளை அறிந்தவன் பிராமணன் எனப்படுகிறான். (பிராமணன் என்பது தகுதியின் அடிப்படையில், பிறப்பின் அடிப்படையில் அல்ல என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்று) கல்வியின் இறுதி இலக்கு கடவுளை அறிந்துகொள்வதே. அதுவே கல்வி. நன்றாகச் சாப்பிடுவது எப்படி, நன்றாகத் தூங்குவது எப்படி, நன்றாகப் பாலுறவு கொள்வது எப்படி, நன்றாகப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பது குறித்த கல்வி மிருகங்களுக்கும் உள்ளது. எனவே, கடவுளை உணர்வதற்கான கல்வியை நாங்கள் வழங்குகிறோம்.

















# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



கிருஷ்ண உணர்வு, மனதின் மீது திணிக்கப்படும் செயற்கையான செயல் அல்ல; இந்த உணர்வு உயிர்வாழியின் உண்மையான நிலையாகும். இந்த தெய்வீக ஒலியதிர்வுகளை நாம் கேட்கும்போது அந்த உணர்வு புதுப்பிக்கப்படுகின்றது. இந்த வழிமுறையினை சான்றோர்கள் கலி யுகத்திற்காகப் பரிந்துரைக்கின்றனர். வீடுபேறு அடைவதற்கு உதவும் இந்த மாபெரும் சங்கீர்த்தனத்தின் மூலம், தெய்வீக பரவச நிலையினை ஒவ்வொருவரும் அடைய முடியும் என்பதை நாமும் நமது அனுபவத்தினால் உணரக்கூடும். ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் இந்த மஹாமந்திரம், புலன்கள், மனம், புத்தி ஆகிய கீழ்நிலைகளைத் தாண்டி நேரடியாக ஆன்மீகத் தளத்திலிருந்து உச்சரிக்கப்படுவதாகும். எனவே, இந்த மஹாமந்திரத்தை உச்சரிப்பதற்கு, மொழியினை அறிய வேண்டிய அவசியமோ, மனக் கற்பனைகளோ, அறிவுப் பயிற்சியோ அவசியமில்லை. ஆன்மீகத் தளத்திலிருந்து இயற்கையாகத் தோன்றும் இந்த கீர்த்தனத்தில், எந்தவொரு முன் தகுதியுமின்றி யார் வேண்டுமானாலும் கலந்துகொண்டு பரவசத்தில் பாடி ஆட முடியும்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்


தமிழில் உள்ள
ஒரே முழுப் பதிப்பு
அனைத்து இஸ்கான்
கோவில்களிலும் கிடைக்கும்.
மேலும் விபரங்களுக்கு, 91596 39306
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம், வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு, மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்கள் சுவைக்கும் அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் காண்டம், ஸ்லோகம் மூன்று

*நிகம-கல்ப-தரோர் கலிதம் ஃபலம்*
*ஷுக-முகாத் அம்ருத-த்ரவ-ஸம்யுதம்*
*பிபத பாகவதம் ரஸம் ஆலயம்*
*முஹுர் அஹோ ரஸிகா புவி பாவுகா:*

### மொழிபெயர்ப்பு

திறமையும், சிந்தனையும் மிக்கவர்களே, வேத இலக்கியங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகிய ஸ்ரீமத் பாகவதத்தை அனுபவியுங்கள். அமிர்தம் போன்ற இந்த ஸ்ரீமத் பாகவத ரசம், முக்திபெற்ற ஆத்மாக்கள் உட்பட அனைவராலும் ஏற்கனவே அனுபவிக்கக்கூடியதாக இருந்தாலும், ஸ்ரீ சுகதேவ கோஸ்வாமியின் திருவாயிலிருந்து மலர்ந்திருப்பதால், மேலும் சுவையுடையதாக ஆகியுள்ளது.

### பொருளுரை

ஸ்ரீமத் பாகவதம், தனது தெய்வீகத் தன்மையினால் மற்றெல்லா சாஸ்திரங்களையும் மிஞ்சிவிட்டு மிகவுயர்ந்த இலக்கியமாகத் திகழ்கின்றது என்பது முந்தைய இரு ஸ்லோகங்களில் தெளிவாக நிரூபிக்கப்பட்டது. இஃது எல்லா பௌதிகச் செயல்களுக்கும், பௌதிக அறிவுக்கும் மேலானதாகும். ஸ்ரீமத் பாகவதம், உயர்ந்த இலக்கியம் மட்டுமல்ல, அனைத்து வேத இலக்கியங்களின் கனிந்த பழம் என்று இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இதுவே எல்லா வேத அறிவின் சாரமாகும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, பொறுமையுடனும் பணிவுடனும் கேட்டல் என்பது மிகவும் அவசியமாகும். ஸ்ரீமத் பாகவதத்தில் வழங்கப்பட்டுள்ள செய்திகளையும் பாடங்களையும், மிகவும் மரியாதையுடனும் கவனத்துடனும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மனிதனால் அறியப்படக் கூடிய அனைத்துமே வேதங்களில் இருப்பதால், அவை கற்பக மரங்களுடன் ஒப்பிடப்படுகின்றன. இகவுலகத் தேவைகள் மட்டுமின்றி ஆன்மீகத் தன்னுணர்வைப் பற்றியும் அவை பேசுகின்றன. சமூகம், அரசியல், மதம், பொருளாதாரம், போர்க்கலை, மருத்துவம், வேதியியல், இயற்பியல், இயற்பியலுக்கு அப்பாற்பட்டவை, மற்றும் உடலையும் ஆத்மாவையும் சேர்த்து வைத்திருப்பதற்குத் தேவையானவை என எல்லாவற்றைப் பற்றிய நெறிப்படுத்தப்பட்ட அறிவும் வேதங்களில் உள்ளது. இவையனைத்திற்கும் அப்பால் ஆன்மீகத் தன்னுணர்விற்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நெறிப்படுத்தப்பட்ட அறிவின் மூலம் உயிர்வாழிகள் படிப்படியாக ஆன்மீகத் தளத்திற்கு உயர்த்தப்படுகின்றனர். மேலும், பரம புருஷரே எல்லா ஆன்மீக ரஸங்களுக்கும் (சுவைகளுக்கும்) இருப்பிடமாக இருப்பவர் என்னும் அறிவே மிகவுயர்ந்த ஆன்மீக உணர்வாகும்.

பௌதிக உலகினுள் முதலாவதாகப் பிறந்த உயிர்வாழியான பிரம்மா முதற்கொண்டு, அற்பமான எறும்பு வரையிலான எல்லா ஜீவராசிகளும், புலன்களைக் கொண்டு ஒருவகையான சுவையை அனுபவிக்க விரும்புகின்றனர். இத்தகு புலனின்பங்கள் சமஸ்கிருதத்தில், ரஸங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அந்த ரஸங்களில் பல வகையுண்டு. வேத சாஸ்திரங்களில் பின்வரும் பன்னிரண்டு வகையான ரஸங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன: (1) *ரௌத்ர* (கோபம்), (2) *அத்புத* (அற்புதம்), (3) *ஷ்ருங்கார* (காதல்), (4) *ஹாஸ்ய* (நகைச்சுவை), (5) *வீர* (வீரம்), (6) *தயா* (தயை), (7) *தாஸ்ய* (தொண்டு), (8) *ஸக்ய* (நட்பு), (9) *பயானக* (அச்சம்), (10) *பீபத்ஸ* (அதிர்ச்சி), (11) *ஷாந்த* (சாந்தம்), (12) *வாத்ஸல்ய* (பெற்றோர் பாசம்).

இவ்வெல்லா ரஸங்களையும் இணைத்தால், அது பற்றுதல் அல்லது அன்பு என்றழைக்கப்படும். அன்பின் இத்தகு அறிகுறிகள், வழிபாடு, தொண்டு, நட்பு, பிள்ளைப் பாசம், காதல் ஆகியவற்றில் முக்கியமாக வெளிப்படுகின்றன. இவ்வைந்தும் இல்லாதிருக்கும்போது, கோபம், அற்புதம், நகைச்சுவை, வீரம், பயம், அதிர்ச்சி போன்றவற்றில் மறைமுகமான முறையில் அன்பு வெளிப்படுகின்றது. உதாரணமாக, ஓர் ஆண் ஒரு பெண்ணிடம் அன்பு கொண்டிருந்தால், அந்த ரஸம், காதல் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அத்தகு காதல் விவகாரங்களில் தொந்தரவு ஏற்படும்போது, வியப்பு, கோபம், அதிர்ச்சி, அல்லது கொடூரங்கள்கூட விளையக்கூடும். சிலசமயங்களில் இரு நபர்களுக்கு இடையிலான காதல் விவகாரங்கள் கொடூரமான கொலைக் காட்சிகளில் முடிவதும் உண்டு. இத்தகைய ரஸங்கள் மனிதர்களுக்கு இடையிலும், விலங்குகளுக்கு இடையிலும் வெளிப்படுகின்றன. ஒரு மனிதனுக்கும் மிருகத்துக்கும்

இடையிலோ, ஒரு மனிதனுக்கும் ஜடவுலகிலுள்ள வேறெந்த உயிரினத்திற்கும் இடையிலோ ரஸப் பரிமாற்றம் என்பது சாத்தியமில்லை. ஒரே இனத்தைச் சேர்ந்த அங்கத்தினருக்கு இடையில் ரஸங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஆனால் ஆன்மீக ஆத்மாக்களைப் பொறுத்தவரையில், குணத்தின் அடிப்படையில் அவை பரம புருஷருக்கு சமமானவை. எனவே, இந்த ரஸங்கள் அதன் ஆதியில், ஆன்மீகமான ஜீவராசிக்கும், ஆன்மீக முழுமையான பரம புருஷ பகவானுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஜீவராசிகளுக்கும் பரம புருஷருக்கும் இடையிலான ரஸம் அல்லது ஆன்மீகப் பரிமாற்றமானது ஆன்மீக வாழ்வில் பூரணமாக வெளிப்படுத்தப்படுகிறது.

எனவே, ஸ்ருதி மந்திரங்களான வேத மந்திரங்களில் பரம புருஷ பகவான், "எல்லா ரஸங்களுக்கும் மூலம்" என்று வர்ணிக்கப்பட்டுள்ளார். எப்போது ஒருவன் பரம புருஷரோடு தொடர்பு கொண்டு, அவருடனான தனது உண்மையான (ஸ்வரூப) ரஸத்தை பரிமாறிக் கொள்கின்றானோ, அப்போது அந்த ஜீவராசி உண்மையான மகிழ்ச்சியை அடைகிறான்.

ஒவ்வொரு ஜீவனும் அதன் ஸ்வரூப நிலையில் பரம புருஷருடன் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு வகை ரஸத்தினைப் பெற்றுள்ளனர் என்று ஸ்ருதி மந்திரங்கள் காட்டுகின்றன. முக்தி பெற்ற நிலையில் மட்டுமே இந்த முக்கிய ரஸங்கள் பூரணமாக அனுபவிக்கப்படுகின்றன. பௌதிக வாழ்விலோ இந்த ரஸங்கள், தற்காலிகமான திரிபடைந்த உருவில் அனுபவிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, பௌதிக உலகின் ரஸங்கள், *ரௌத்ர* (கோபம்) போன்ற பௌதிக வடிவில் வெளிப்படுகின்றன.

எனவே, செயல்களின் அடிப்படைக் கொள்கைகளாக விளங்கும் இந்த பல வகைப்பட்ட ரஸங்களைப் பற்றிய முழு அறிவை அடைபவர், அந்த மூல ரஸங்கள் எவ்வாறு இந்த பௌதிக உலகில் பிரதிபலிக்கப்பட்டு தவறான தோற்றத்துடன் உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கற்றறிந்த பண்டிதர் ஆன்மீக உருவிலுள்ள உண்மையான ரஸத்தை மட்டுமே அனுபவிக்க விரும்புவார். தொடக்கத்தில் அவர் பரமனுடன் ஒன்றாகி விட விரும்புகிறார். வெவ்வேறு ரஸங்களைப் பற்றி அறியாத, குறை புத்தியுடைய ஆன்மீகவாதிகளால், ஆன்மீக முழுமையுடன் ஒன்றாகக் கலப்பது என்னும் கருத்திற்கு அப்பால் செல்ல முடியாது.

இந்த ஸ்லோகத்தில், முக்திபெற்ற நிலையிலும் அனுபவிக்கக் கூடிய ஆன்மீக ரஸத்தினை எல்லா வேத அறிவின் கனிந்த பழமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவதம் என்னும் இந்த இலக்கியத்தினால் அனுபவிக்க முடியும் என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. இந்த தெய்வீக இலக்கியத்தை பணிவுடன் கேட்பதன் மூலம், ஒருவர் இதயப்பூர்வமான பூரண ஆனந்தத்தை அடைய முடியும். ஆனால், விஷயத்தைச் சரியான நபரிடமிருந்து கேட்பதில் ஒருவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஸ்ரீமத் பாகவதம் சரியான மூலத்திலிருந்து அப்படியே பெறப்பட்டதாகும். அது, நாரத முனிவரால் ஆன்மீக உலகிலிருந்து கொண்டு வரப்பட்டு, அவரது சீடரான ஸ்ரீ வியாசதேவருக்கு வழங்கப்பட்டது. வியாசர் அச்செய்தியை தமது மகனான ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமிக்கு வழங்கினார். மேலும், ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி அச்செய்தியை ஏழு நாட்களில் இறக்கவிருந்த பரீக்ஷித் மகாராஜனுக்கு வழங்கினார். ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி பிறவியிலிருந்தே முக்தி பெற்ற ஆத்மாவாகத் திகழ்ந்தார். அவர் தமது தாயின் கருவில் இருந்தபோதே முக்தி பெற்ற நிலையில் இருந்தார். மேலும், அவர் தனது பிறப்பிற்குப் பின் எவ்விதமான ஆன்மீகப் பயிற்சியையும் மேற்கொள்ளவில்லை. பிறக்கும்போது, பௌதிகத்திலும் சரி, ஆன்மீகத்திலும் சரி, யாரும் தகுதியுடையவர்கள் அல்ல. ஆனால், ஸ்ரீ சுகதேவ கோஸ்வாமி, பக்குவமான முக்தி பெற்ற ஆத்மா என்ற காரணத்தினால், ஆன்மீகத் தன்னுணர்வைப் பெறுவதற்கான பரிணாம முறையினைப் பின்பற்ற வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை. இயற்கையின் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டு, தெய்வீகத் தளத்தில் நிலைபெற்று, பூரண முக்தி பெற்ற நபராக அவர் திகழ்ந்தபோதிலும், வேத மந்திரங்களைப் பாடும் முக்திபெற்ற ஆத்மாக்களால் பூஜிக்கப்படுபவரான பரம புருஷ பகவானின் தெய்வீக ரஸத்தினால் அவர் வசீகரிக்கப்பட்டார். பரம புருஷரின் லீலைகள், இகலோக மக்களைக் காட்டிலும் முக்தி பெற்ற ஆத்மாக்களை மிகவும் கவரக்கூடியவை. தெய்வீக ரஸத்தினைப் பரிமாறிக் கொள்வது நபருடன் மட்டுமே சாத்தியம் என்பதால், அவர் அருவமாக இருக்க முடியாது. பகவானின் தெய்வீக லீலைகள் ஸ்ரீமத் பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன, மேலும் அந்த வர்ணனைகளை ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி முறையாக விளக்கியுள்ளார். இதனால், முக்தியை விரும்புபவர்கள், பரம முழுமையுடன் ஒன்றாக விரும்புபவர்கள் ஆகியோர் உட்பட எல்லா பிரிவினர்களுக்கும் இந்த விஷயங்கள் பொருத்தமானவை.

சமஸ்கிருதத்தில், கிளியும் *சுக* என்றே அறியப்படுகிறது. கனிந்த பழமொன்று அத்தகு பறவைகளின் சிவந்த அலகால் கடிக்கப்படும்போது, அதன் தித்திப்பான சுவை அதிகரிக்கின்றது. முதிர்ச்சியும் கனிவும் கொண்ட வேதம் எனப்படும் பழம், ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியின் உதடுகளிலிருந்து பேசப்பட்டதாகும். பண்டிதரான தனது தந்தையிடமிருந்து கேட்ட பாகவதத்தை அப்படியே கூறியதற்காக அவர் கிளியோடு ஒப்பிடப்படவில்லை; மாறாக, எல்லாப் பிரிவினருக்கும் ஏற்புடைய வகையில் பாகவதத்தைப் பேசும் திறமையைப் பெற்றிருந்ததாலேயே அவர் அவ்வாறு ஒப்பிடப்படுகிறார்.

இந்த விஷயம் ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியின் உதடுகளின் மூலமாகத் தகுந்த முறையில் பேசப்பட்டதாகும். இதனை அடக்கத்துடன் கேட்கும் ஆர்வமுள்ள நபர்களால், பௌதிக உலகின் திரிபடைந்த சுவைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தெய்வீக சுவைகளை உடனேயே அனுபவிக்கமுடியும். இந்த கனிந்த பழம், மிகவுயர்ந்த உலகமான கிருஷ்ண லோகத்திலிருந்து திடீரென்று கீழே எறியப்பட்டதல்ல. மாறாக, எவ்வித மாற்றமும் தொந்தரவுகளும் இன்றி சீடப் பரம்பரை என்னும் சங்கிலியின் மூலமாக கவனமாகக் கீழே வந்துள்ளதாகும். தெய்வீக சீடப் பரம்பரையைச் சாராத முட்டாள் மக்கள், இப்பழத்தினைப்

படிப்படியான ஆன்மீக உணர்வின் வழியே மிகவும் கவனமாக வழங்கும் சுகதேவ கோஸ்வாமியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாமல், ராஸ நடனம் என்று அறியப்படும் மிகவுயர்ந்த திவ்யமான ரஸத்தினை புரிந்துகொள்ள முயற்சி செய்து மாபெரும் தவறிழைக்கின்றனர். விஷயத்தை மிகவும் கவனமாக அணுகும் சுகதேவ கோஸ்வாமியைப் போன்ற நபர்களைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீமத் பாகவதத்தின் நிலையினைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு ஒருவன் புத்திசாலியாக இருக்க வேண்டும். எதிர்காலத்திலும் கூட, ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியின் ஓர் உண்மையான பிரதிநிதியிடமிருந்து மட்டுமே ஸ்ரீமத் பாகவதத்தை அறிய வேண்டும் என்பதையே பாகவத பரம்பரை அறிவுறுத்துகின்றது. விரோதமான முறையில் பாகவதத்தை பாராயணம் செய்து, அதையே வியாபாரமாகக் கொண்டுள்ளவன் நிச்சயமாக சுகதேவ கோஸ்வாமியின் பிரதிநிதி அல்ல. தனது வயிற்றுப் பிழைப்பிற்காக சம்பாதிப்பதே அத்தகைய மனிதனின் தொழிலாகும். ஆகவே, இத்தகு வியாபார நோக்கமுள்ளவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதை ஒருவர் தவிர்க்க வேண்டும். இவர்கள், இந்த மிகவும் முக்கியமான விஷயத்தைப் புரிந்துகொள்வதற்கான படிப்படியான வழிமுறையைப் பின்பற்றாமல், இந்நூலின் மிகவும் இரகசியமான பகுதிக்கு உடனடியாகச் செல்கின்றனர். அவர்கள், பொதுவாக, முட்டாள்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்படும் ராஸ நடனத்தினுள் நுழைகின்றனர். அவர்களில் சிலர், ராஸ நடனம் தர்மத்திற்குப் புறம்பானது என்று நினைக்க, வேறு சிலரோ அதனை தங்களின் சொந்த அபத்தமான விளக்கங்களால் மூடி மறைக்கப் பார்க்கின்றனர். ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதில் அவர்களுக்கு எவ்வித விருப்பமும் இல்லை.

எனவே, முடிவு செய்ய வேண்டியது என்னவெனில், ரஸத்தை அறிய விரும்பும் உண்மையான மாணவனொருவன், சுகதேவ கோஸ்வாமியின் சீடப் பரம்பரையில் தோன்றியவரிடமிருந்து பாகவதத்தின் செய்தியைப் பெற வேண்டும்; பாகவதத்தை அவர் முறையாக ஆரம்பத்திலிருந்து விளக்கினார், தெய்வீக விஞ்ஞானத்தில் அற்ப அறிவைப் பெற்றுள்ள பௌதிகவாதியை மகிழ்விக்க அவர் மனம்போனபடி விளக்கவில்லை. சுகதேவ கோஸ்வாமி அல்லது அவருடைய உண்மையான பிரதிநிதியின் திருவாயிலிருந்து வரும் அமிர்த ரஸத்தைப் பருகுவதன் மூலம், உண்மையும் உறுதியும் கொண்ட ஒருவர் வேத அறிவின் கனிந்த பழத்தை உடனடியாக அனுபவிக்குமளவிற்கு ஸ்ரீமத் பாகவதம் மிகவும் கவனமாக வழங்கப்பட்டுள்ளது.

(அடுத்த இதழில் தொடரும்).

## கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

### ஜுலை

07, புதன், ஸ்ரீ ஸ்ரீவாஸ பண்டிதர் மறைவு நாள்

08, வியாழன், யோகினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:58–08:25

11, ஞாயிறு, ஸ்ரீ கதாதர பண்டிதர் மறைவு நாள்
ஸ்ரீல பக்திவிநோத தாகூரர் மறைவு நாள்

12, திங்கள், குண்டிசா மார்ஜனம்

13, செவ்வாய், பூரி ஜகந்நாதர் ரதயாத்திரை
ஸ்ரீ ஸ்வரூப தாமோதர கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீ சிவானந்த சேனர் மறைவு நாள்

21, புதன், ரதம் திரும்ப வரும் நாள்

22, வியாழன், சயன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:02–10:15

25, ஞாயிறு, குரு பூர்ணிமா
ஸ்ரீல சனாதன கோஸ்வாமியின் மறைவு நாள்
சாதுர்மாதத்தின் முதல் மாத தொடக்கம்
(கீரை வகைகளிலிருந்து விரதம்)

31, சனி, ஸ்ரீல கோபாலபட்ட கோஸ்வாமி மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)



### சாதுர்மாஸ்யம்

மழைக் காலத்தைச் சார்ந்த நான்கு மாதங்கள் சாதுர்மாஸ்யம் எனப்படும். சாதுர்மாஸ்ய விரதத்தை அனுசரிக்க வேண்டியது மக்கள் அனைவருக்கும் அவசியமாகும். இந்த நான்கு மாதங்களின் போது மேற்கொள்ளப்படும் விரதத்தின் முக்கிய நோக்கம், புலனின்பத்திற்கான அளவை குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதே. முதல் மாதத்தில் கீரை வகைகளையும், இரண்டாவது மாதத்தில் தயிரையும், மூன்றாவது மாதத்தில் பாலையும், நான்காவது மாதத்தில் உளுத்தம் பருப்பையும் தவிர்த்தல் வேண்டும். மொத்தமாகப் பார்த்தால், சாதுர்மாஸ்யம் எனப்படும் இந்த நான்கு மாதக் கால அளவில், புலனின்பத்திற்கான உணவுகளை கைவிடுவதற்கு பயிற்சி செய்ய வேண்டும்.

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2626508/9. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net
www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 041. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@pamho.net
www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net
www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: 99442 05875. மின்னஞ்சல்: rukmiha.jps@pamho.net

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை. தொலைபேசி: 93623 10556. மின்னஞ்சல்: adgd.jps@gmail.com

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001.
தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jai.gopinath.jps@pamho.net


**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.






# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**

ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், லீலை, போன்றவற்றைப் பற்றிக் கேட்பதே ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும். இந்த வழிமுறையினை அறியாத முட்டாள்கள், நிரந்தரமற்ற பொருள்கள், விஷயங்கள், மற்றும் நபர்களைப் பற்றிக் கேட்பதில் ஆவலாக உள்ளனர். கேட்பதில் இருக்கும் ஆர்வத்தை நல்லபடியாக எவ்வாறு உபயோகிப்பது என்பதை அறியாமல் உள்ளனர்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய ஸ்ரீமத் பாகவத உரையிலிருந்து (2.1.2)

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாதந்தோறும்
உங்கள் இல்லம் தேடி வர,
சந்தாதாரராக மாறுங்கள்:
ஒரு வருட சந்தா: ரூ.160
இரு வருட சந்தா: ரூ.300
ஐந்து வருட சந்தா: ரூ.700
மேலும் விபரங்களுக்கு,
உள்பக்கங்களை பார்க்கவும்.

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!**